விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 பங்குனி 12 றஜபு 25 இதழ் 42

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 26-3-1987

## முத்திரைச் சந்தியில் இராணுவக் கைதிகள் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், வியாழன். தமிழீழ விடுதலைப் புலிகளினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் யாழ். பண்ணை பொலிஸ் விடுதிக்குள் வைத்து கைதுசெய்யப்பட்ட எட்டு சிப்பாய்களும் நேற்றுக் காலை பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டனர்.

கச்சேரி-நல்லூர்வீதி நாயன் மார்கட்டுச் சந்தியில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்றுக்காலை சுமார் 11-45 மணியளவில் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திலீபன் இராணுவக் கைதிகள் ஏற்றப்பட்ட சிறிய ஜீப்வண்டியை அங்கு கொண்டுவந்தார்.

இக்கைதிகள் அங்குகொண்டு வரப்படுவதற்கு முன்னர் புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி கிட்டு ஒழுங்குகளை


(5-ம் பக்கம் பார்க்க)

### யாழ் குடாநாட்டிலுள்ள இராணுவத்துக்கு பயிற்சியளிக்க 50 வெளிநாட்டு படையினர்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டிலுள்ள பலாலி இராணுவ முகாமிற்கு அண்மையில் ஐம்பதிற்கு மேற்பட்ட வெளிநாட்டுபடையினர் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் இவர்களில் பலர் இஸ்ரே

(5-ம் பக்கம் பார்க்க)



புலிகளினால் கைதுசெய்யப்பட்ட யுத்தக்கைதிகள் எட்டுப்பேரும் நேற்று முத்திரைச்சந்தியில் பார்வைக்காக இருத்தப்பட்டிருப்பதைக் காணலாம்

# யுத்தகைதிகளைப்பார்க்க தலைவர் பிரபா வருவார்



### இன்றும் மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம் வியா. யாழ் பண்ணை பொலிஸ் விடுதி இராணுவ முகாம் மீது

5-ம் பக்க[ம் பா]ர்க்க)

## இந்தியாவுக்கு எதிராக செயல்படும் நோக்கம் புலிகளுக்கு இல்லை



### 'ஈழநாடு'வுக்கு தளபதி கிட்டு பேட்டி

(எமது அலுவலக நிருபர் மு. வாமதேவன்)

**யாழ்ப்பாணம் பண்ணை பொலிஸ்நிலைய விடுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் பிடிக்கப்பட்ட யுத்தக் கைதிகளை தலைவர் பிரபாகரன் விரைவில் பார்வையிடுவார்.**

யாழ்ப்பாணம் பண்ணை பொலிஸ் நிலைய விடுதியில் கடந்த திங்கள் அதிகாலை தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைதுசெய்யப்பட்ட யுத்தக் கைதிகள் சம்பந்தமாக 'ஈழநாடு'வுக்கு அளித்த விசேஷ

(5-ம் பக்கம் பார்க்க)

### கோட்டையிலிருந்து ஷெல் அடித்து அப்பாவிப் பொதுமக்களை கொல்பவர்கள் இவர்கள்தானா?

யாழ்ப்பாணம், வியா கோட்டையிலிருந்து'ஷெல்' அடித்து அப்பாவி மக்களைக் கொல்பவர்கள் இவர்கள் தானா? என்று நேற்று பொது மக்கள் பார்வைக்காக இருத்தப்பட்டிருந்த விடுதலைப்புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்ட 3 பொலிஸ் கமாண்டோக்களை

(5-ம் பக்கம் பார்க்க)

### மட்டு. போரதீவில் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி 15 கமாண்டோக்கள் பலி

யாழ்ப்பாணம், வியா மட்டக்களப்பு மாவட்டத்தில் பழுகாமத்திற்கும் போரதீவுக்குமிடையில் கமாண்டோக்கள் அணியொன்றின் மீது நேற்று விடுதலைப்புலிகள் நடத்திய கண்ணிவெடித்தாக்குதலில், பவல் கவசவாகனம் ஒன்று சிக்கியதையடுத்து அதில் பயணம்செய்த பதினைந்து கமாண்டோக்களும் கொல்லப்பட்டனர். கவச வாகனம் சுக்குநூறாகியதென விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:

(5-ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் சுட்டு பொலிஸார் காயம்

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்று கோட்டை இராணுவத்தின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மந்திகையைச்சேர்ந்த துரைரட்ணம் — இராசரட்ணம் [வயது 29) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே பொலிஸ் நிலையத்திலிருந்து சாப்பாட்டுக்குப்போகும்போது பிரதான வீதியிலுள்ள வாடிவீட்டுச் சந்திக்கு அருகாமையில் கோட்

(5-ம் பக்கம் பார்க்க)

### கொழும்பிலிருந்து முக்கிய பிரமுகர்கள் யாழ். வந்தார்களா?

யாழ்ப்பாணம்,வியா. நேற்றுக் காலை 7-30 மணியளவில் விசேஷ விமானம் ஒன்று பலாலி முகாமில் வந்து இறங்கியது.

இவ்விமானத்தில் கொழும்பிலிருந்து முக்கிய பிரமுகர்கள் வந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

இந்த விமானம் வந்திறங்கிய சற்று நேரத்தில் ஹெலிகொப்டர் ஒன்று யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியை நோக்கி வந்து சென்றது. இந்த ஹெலிகொப்டரில் கொழும்பிலிருந்து வந்தவர்கள் நகரின் பல பகுதிகளையும் சுற்றிப்பார்வையிட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

### தோப்பூர் இராணுவ அரண்மீது ஈரோஸ் தாக்குதல் 5 கொமாண்டோக்கள் பலி, பலர் காயம்

#### படையினரின் தாக்குதலில் 10 முஸ்லிம்கள் பலி

யாழ்ப்பாணம், வியா, தோப்பூர் இராணுவ காவல் அரண்மீது ஈழப்புரட்சி அமைப்புப் போராளிகள் நடத்திய தாக்குதலில் 5 இராணுவத்தினர்ஸ்தலத்தில் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினமிரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஈழப் புரட்சி அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக அந்த அறிக்கை

(5-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். சி-8056

Nallur Farm Centre சிவப்பு, கறுப்பு சேவற்குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 27-03-1987 ல் விநியோகிக்கப்படும் உடன் பதிவு செய்யவும். C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். [சி- 8181]

20 அடி உயர குரோமியம் பூசிய புதிய கொடிஸ்தம்பம் விற்பனைக்குண்டு. பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். சி-8204

ஜேவீசி, நஷனல் கம்பனிகளின் 20'' கலர் தொலைக் காட்சி பெட்டிகளும் மின்சார மோட்டர்வாளும் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு:ஸ்னேக்காவீடியோ மன்சில், திருநெல்வேலிச்சந்தி. சி 8195

சாப்பாட்டுக் கதிரைகள் National NV 300 Deck, புதிய குளிர்சாதனப் பெட்டிகள், Stabulizer, Lamp Shade தொட்டில், Shcw case, Centre table, Suit case மற்றும் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. பத்மநாதன், பிறிமல்ரி சேவிஸ், திருநெல்வேலி, வடக்கு. (சி-8186]

Hy-Line (ஹை-லைன்)வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள், Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் முழுப்பணம் முசலுத்தி ஒரு வாரத்துக்குள் பெற்றுக்கொள்ளலாம். விலை 15/- சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். சி-8145

இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகராலயத்துக்கு அண்மையில் ஷி கோயில் நிதிக்காக பொல்வத்தைக்காணி 15 பரப்பு உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு தா. கனகசுந்தரம் (கிளாக்கர்) கலட்டியவத்தை, இளவாலை. சி-8194

கொக்குவில் மேற்கு பிடாரி கோவிலடியில் ஆடியபாதம் ரோட் முகப்புடைய காணி நிலப்பரப்பு 5½ யும் குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதியில் வராகிகோவில் ஒழுங்கை முகப்பில் நில - பரப்பு 3-ம் விற்பனைக்குண்டு பி. ப. 4-6 வரை சந்திக்கலாம். தொடர்பு: மா. தியாகராசா, சட்டத்தரணி, ஆனைக் கோட்டை. சி-8192

கொக்குவில் பிரதான தபால் கந்தோருக்கருகாமையில் காங்கேசன்துறை வீதியில் நிலப் பரப்பு 2½ விற்பனைக்குண்டு. பி. ப. 4—6 வரை சந்திக்கவும். தொடர்பு: மா. தியாகராசா, சட்டத்தரணி, ஆனை கோட்டை. [சி 8191]

## தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் மின்சாரம் நீர் முதலிய வசதிகளோடு நான்கு அறைகளுக்குக் குறையாத வீடு வாடகைக்குத் தேவை. சி-8154 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். சி-8154

எமது ஸ்தாபனத்தால் வெளியிடப்படும் பத்திரிகை, சஞ்சிகைகள் போன்றவற்றை தனித்தனியாக விற்பதற்கு விற்பனையாளர்கள் தேவை, இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். நேரிலும் தொடர்பு கொள்வது நன்று. ஈகிள் அச்சகம், சட்டநாதர் கோவிலடி, கல்வியன்காடு, யாழ்ப்பாணம். (சி- 8210)

## வகுப்புக்கள்

A/L 89,88 கலை, வர்த்தக வகுப்புகள்; O/L 87 பகல்நேர வகுப்பு 21-03-1987. ஆரம்பமாகியது. மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி. [சி-8068]

பிரத்தியேக தமிழ் ஆங்கில சுருக்கெழுத்து வகுப்புகள் ஆரம்பமாகின்றன. 4-4-87 சனிக்கிழமை பி. ப. 2 மணி இராஜஸ்தான் தபால் கந்தோரடி, நெல்லியடி. சி-8174

Radio-TV, Air conditioning Refrigeration, வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், வைண்டிங் தட்டெழுத்து, சுருக்கெழுத்து புதிய பிரிவு ஆரம்பமாகின்றது. பட்டதாரி ஆசிரியர்களால்கற்பிக்கப்பட்டு London பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Hall 328,நாவலர் வீதி, (ஆனைப்பந்திச் சந்திக்கு அருகாமையில்)யாழ்ப்பாணம். [சி-8164]

## பயிற்சி

Refrigeration & Air Con, ditioning டிராப்மென்சிப்-ரி வி அன்ட் ரேடியோ எலக்ரிக்கல்வயரிங் தமிழ், ஆங்கிலம் தட்டச்சு, சுருக்கெழுத்து, IAB Foundation ஆகிய பயிற்சி நெறிகள் 29 - 03 - 87 ல் ஆரம்பமாகவுள்ளன. சேர விரும்புவர்கள் நிறுவனத்துடன் தொடர்பு கொள்க. Institute of Technical Studies, வட்டுக்கோட்டை. சி-8205

## சேவை

யூனிபோ தொழிற்சாலையில் கேற், கிறில் மற்றும் இரும்பு சம்பந்தமான சகல பொருட்களும் செய்வதற்கு ஆடர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அத்துடன் ரெருசோ நிலம் செய்வதற்குத் தேவைப்படும் அலுமீனிய பட்டங்களை மெசின்மூலம் வெட்டுவது, மற்றும் ஒட்டுவது பொருத்துவது போன்ற வேலைகளுக்குரிய ஆடர்களையும் ஏற்றுக்கொள்கிறோம். தொடர்பு: பொது முகாமையாளர், யூனிபோ தொழிற்சாலை, வேம்பன் வீதி, உரும்பிராய். சி-7613

---

வரைவுள்ள

## நெடுந்தீவு

ப. நோ. கூ. சங்கம்

[யா 1662 — 5-12-1979]

## வெற்றுச்சாக்கு கேள்வி விற்பனை

வெற்றுச்சாக்குத் தொகை: 3273
விண்ணப்பப்படிவம்: 5/-
மீளளிப்பு வைப்புப் பணம்; 300/-
முடிவு திகதி: 1-04-87
நண்பகல் 12-00மணி

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வெற்றுச் சாக்கு" எனக் குறிப்பிட்டு தலைவர், நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கம், நெடுந்தீவு என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.

பொது முகாமையாளர்
நெடுந்தீவு ப. நோ. கூ.
சங்கம்,
நெடுந்தீவு.
23-03-87 [ஏ 3773]

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



இளங்கோ

[K. U. குமார் வவனியா]

மலர்வு: 08-02-1963
உதிர்வு: 26-03-1986

எங்கள் குமரனே! உன் ஆத்மா சாந்திபடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்,
உறவினர், நண்பர்கள்.
[சி-8201]

---

இருபாலையில்... ... ...

## A/L - 89

தூய / பிரயோககணிதம்

மார்ச் 28ல்
பி ப. 3-30க்கு ஆரம்பம்

ஆசிரியர்:

திரு. வெக்டர்

THE EXPRESS INSTITUTE KOPAY

[ஏ 3809]

---

## 1987-ம் ஆண்டுக்கான மோட்டார் வாகனங்கள் லைசென்ஸ் புதுப்பித்தல்

பற்றிசியன் தொழிற்பயிற்சி நிறுவனத்தில் 1987ம் ஆண்டிற்கான லைசென்ஸ் புதுப்பிப்பதற்கு தேவையான அத்தாட்சிப் பத்திரங்கள் வாகனங்களை பரிசோதித்து விநியோகம் செய்கிறார்கள்.

இதுவரை வாகன லைசென்ஸ் புதுப்பியாது இருந்தால் கீழ்க்காணும் விலாசங்களுடன் தொடர்பு கொண்டு உங்கள் புதிய வாகன லைசென்ஸ்சைப் பெற்றுகொள்ளவும்.

பதிவாளர்;
பற்றிக்ஸ் இன்ஸ்றிரியூட்
59, சென்ற் பற்றிக்ஸ் ரோட்,
யாழ்ப்பாணம்.
[ஏ 3811]

A. S. குணசீலன்
(தன்னியக்க பொறியியலாளர்)
"லிங்கஸ்தான்", கோப்பாய்
தெற்கு, கோப்பாய்.

---

எரிபொருள்தடை

## அபிவிருத்திவேலைகள் பாதிப்பு

ஒட்டுசுட்டான் நிருபர்

முல்லைத்தீவு அபிவிருத்திச் சபை இந்த வருடத்தில் மேற்கொள்ளவேண்டிய அபிருத்தி திட்டங்களில் காலாண்டு தவணை முடிவதற்கு இன்னும் சில தினங்களே இருந்தும் எரிபோருள் தடையால் பத்து சத வீதமான அபிவிருத்தி வேலைகள்கூட செய்துகொள்ள முடியவில்லையென முல்லைத்தீவு திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. ஆர். தர்மகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

## மின்மாற்றி சேதம்

பலாலி, புதன்

சில நாட்களுக்குமுன்காங்கேசன்துறை காபர்வியூ ஹோட்டல் முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் மாவிட்டபுரம் தச்சன் காட்டுப்பகுதியில் உள்ள மின் மாற்றியில் விழுந்து மின் மாற்றி சேதமானது.

இதனால் கொல்லங்கலட்டி, கிளானை, பன்னாலை ஆகிய இடங்கள் கடந்த சில நாட்களாக இருளில் மூழ்கியுள்ளன.

மின் ஊழியர் பழுதடைந்த மின்மாற்றியை திருத்துவதற்கு அச்சம் தெரிவிக்கின்றனர்.

---

## 3-வது நினைவு அஞ்சலி



நடராசா யோகராசா

ஆண்டவன் படைப்பு:
05-11-1956
ஆள்பவன் அழிப்பு:
28-03-1984

அன்பின் உருவாய், பண்பின் சின்னமாய்ப் பிரகாசித்த எமது யோகம் எம் அனைவரையும் தவிக்கவிட்டு நீர் இறைவனடி சேர்ந்து ஆண்டுகள் மூன்று உருண்டுவிட்ட போதிலும் உம் நினைவு எமது நெஞ்சைவிட்டு என்றும் அகலாது. உம் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் வாடும்:
அன்பு அம்மா,
சகோதரர்கள், சகோதரிகள், அத்தான்மார்,
அண்ணி, மருமக்கள்.
7, ஆஸ்பத்திரிவீதி,
மானிப்பாய்.
[ஏ3774]

---

## அன்பளிப்பு

நெல்லியடி. புதன்

பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை நோயாளிகள் நலன் புரிச்சங்க வேண்டுகோளுக்கு அமைய அச்சுவேலி மர உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் 50 புற்பாய்களை அன்பளிப்புச் செய்துள்ளது. மேலும் அச்சுவேலி ப. நோ. கூ. சங்கம் நோயாளிகளின் நலன் கருதி பத்து வாங்குகளை அன்பளிப்புச் செய்யவிருக்கிறது.

## மின் தடை

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். மாநகர சபையின் ஆஸ்பத்திரி வீதியின் மார்க்கக் கம்பிகள் அறுந்துள்ளதால், திருத்த வேலைகள், நடைபெறும் வரை மாநகர சபை எல்லைக்குள் சில பகுதிகளுக்கு மின்சாரம் இரவில் மட்டும் மாறி மாறி தடைப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின் பாவனையாளரை முற்றுக பாதிக்காத முறையில் இலங்கை மின்சார சபை யாழ் டிப்போ மின் அத்தியட்சகர் இத் துரித நடவடிக்கையை எடுத்துள்ளார். (இ)

## அகதிகளுக்கு நிதிஉதவி

பலாலி, செவ்வாய்

சுன்னுகம் புகையிரத நிலையத்தில் அகதிகளாகதங்கியிருக்கும் நூறுபேருக்கு 'மஸ்கன் சீற்' தொழிலகத்தினர் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான உணவுப்பொருட்களை வழங்கவுள்ளனர்.

கிளிநொச்சிப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் பாதிக்கபட்ட சுமார் 100பேர் வரை சுன்னுகம் புகையிரத நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

அண்மையில் பத்திரிகையில் வெளியிடப்பட்ட செய்தியறிந்த மேற்படி நிறுவனத்தினர் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான அரிசி, மா, பருப்புவகைகளை வழங்க முன்வந்துள்ளனர். (சி)

## விளையாட்டுப் போட்டி

பண்டத்தரிப்பு, புதன்

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நடைபெற்றபோது கிருபை இல்லம் 222 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றது.

கல்லூரி அதிபர் திருமதி மு. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் புளோரு இல்லம் 217 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், ஹில்லீஸ் இல்லம் 216புள்ளிகளைப்பெற்று மூன்றுமிடத்தையும் பெற்றன. இப்போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட முன்னுள் அதிபர் திருமதி கலாவல்லி ஆறுமுகதாசன் பரிசில்களை வழங்கினுர்.

---

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலையின்

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

வருடாந்தப் பொதுக்கூட்டம் 1987-4-4ம் திகதி காலை 9-00 மணிக்கு நடைபெறும். ஆசிரியர்கள், பெற்றுர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர். புதிதாக சேரவிரும்புவோர் சந்தாப் பணத்தை முன்கூட்டியே செலுத்தி பதிவு செய்து கொள்ளவும்.

[சி 8209] செயலாளர்.

# 2 மாநிலங்களில் இ. காங்கிரஸ்பெரும்தோல்வி!

புதுடில்லி, மார்ச் 2

**இந்தியாவில் இடம்பெற்ற மூன்று மாநிலத் தேர்தல்களில் இரண்டில் ஆளுங்கட்சியான இந்திரா காங்கிரஸ் பெரும் தோல்வியைத் தழுவியுள்ளது ஒரு மாநிலத்தி் மட்டுமே கூட்டுப்போட்டி அடிப்படையில் இந்திரா காங்கிரஸ் வெற்றிபெற்றுள்ளது.**

கேரளா, மேற்கு வங்காளம், ஜம்மு-காஷ்மீர் ஆகிய மாநிலங்களிலேயே மாநில சட்டசபைத்தேர்தல்கள் இடம்பெற்றன.

கேரளாவில் இடது சாரி ஜனநாயக முன்னணி வெற்றி பெற்றுள்ளது. சி. பி. எம்., சி. பி. ஐ., ஜனதா, ஐ. ஸி. எஸ். ஸி., ஆர். எஸ். பி, லோக்தள் மற்றும் சுயேட்சைகள் சிலவற்றைக் கொண்டதே இந்த முன்னணியாகும்.

இக் கூட்டமைப்பை எதிர்த்துப் போட்டியிட்ட ஐக்கிய ஜனநாயக முன்னணி தோல்வியைத் தழுவியுள்ளது. இந்திரா காங்கிரஸைத் தலைமையாகக் கொண்ட 6 கட்சிகள் இந்த முன்னணியில் கூட்டுச் சேர்ந்துள்ளன.

140 தொகுதிகள் கொண்ட கேரளா மாநிலத்தில் 138 தொகுதிகளில் தேர்தல் இடம்பெற்றது. இறுதியாகக் கிடைத்த தகவலின்படி 136 இடங்களின் முடிவுகள் வெளியாகியிருந்தன. இவற்றில் 75 இடங்களை இடசாரி ஜனநாயக முன்னணி கைப்பற்றியது. 61 இடங்களை ஐக்கிய ஜனநாயக முன்னணி கைப்பற்றியது.

உலகச் செய்திகள்

மே. வங்காளத்தில் இந்திய மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி பெரும்பான்மை பலத்தைப் பெற்றுள்ளது. இங்கு இந்திரா காங்கிரஸ் பெரும்தோல்வியை தழுவிக்கொண்டது.

இந்தியாவின் வட மாநிலமான ஜம்மு-கஸ்மீரில் மட்டுமே இநதிராகாங்கிரஸ் கட்சி தனது நிலையை ஸ்திரப்படுத்தியுள்ளது.

இங்கு இம்மாநிலத்தின் செல்வாக்கு மிக்க கட்ங்சியான டாக்டர் பருக் அட்துல்லா தலைமையிலான தேசிய மாநாட்டுக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்ததாலேயே இந்திரா காங்கிரஸ்கட்சி தனதுநிலையை உறுதிப்படுத்தக்கூடியதாக விருந்தது.

இதேவேளை புதுச்சேரியில் இடம்பெற்ற பாகூர் என்ற ஒரு தொகுதிக்கான இடைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வெற்றிபெற்றுள்ளது.

இக்கட்சியின் உறுப்பினரான ராஜலிங்கம், ஜனதா உறுப்பினரான ராஜவேலு என்பவரை 910 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். இத்தொகுதி ஒரு ஜனதாக் கட்சி கோட்டையாக இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது

---

## சாட் படைகள் முற்றுகை:
# 1200 லிபிய படைகள் பலி! 400 பேர் கைது!

லண்டன், மார்ச் 25

வடஆபிரிக்க நாடான சாட்டின் வடபகுதியிலிருந்த லிபியதளமொன்று சாட்படைகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

வாடிடூம் என்ற இத்தளத்திலிருந்த லிபியப்படைகளில் 1200 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இப்படைகளின் பிராந்தியத்தளபதி உட்பட 400 பேர் கைதாகியுள்ளனர் என்று சாட் அரசு தெரிவித்துள்ளது.

இந்த மோதலில் 29 சாட் படையினர் மட்டுமே கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாட்படைகள் வாடிடூம் தளத்தில் 11 குண்டு வீச்சு விமானங்கள், 3 சோவியத் ஹெலிகாப்டர்கள், டாங்கிக ு மற்றும் ஆயுதங்களை கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கபட்டது.

---

## இந்திய விமானத்தைக்கடத்த திட்டம்:
# விமான நிலயங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

புதுடில்லி, மார்ச், 25

இந்திய விம னமொன்றைக் கடத்தும் நோக்கில் நான்கு பலஸ்தீனியர்கள் புதுடில்லிக்குச் சென்றுள்ளதாக புலனாய்வுத்துறையி ருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இந்தியாவின் சகல பகுதிகளிலும் உள்ள விமான நிலையங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் 'அகூனிதால்' பிரிவைச் சேர்ந்த நான்குகெரில்லாக்கள் கடந்த பத்து நாட்களுக்குள் இந்தியாவினுள் பிரவேசித்துள்ளார்கள் என்றும் கூறப்படுகிறது.

பிரயாணிகள் ஜெற் விமானமொன்றைக் கடத்திச் செல்வதற்கு இவர்கள் திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. இந்த நால்வரிடமும் வெடிமருந்துகளும் நவீனரக ஆயுதங்களும் உள்ளதாகவும் அந்த இரகசியத் தகவல் தெரிவித்துள்ளது. [சி]

---

# 'எரிபொருள் முன்னர்போல் வழங்கப்படவேண்டும்'

யாழ்ப்பாணம், வியா

"இராணுவ முகாம்களில் எரிபொருள் பெர்மிட் குறித்த ஓரிடத்தில் மட்டும் எரிபொருளும் வழங்கும் நடவடிக்கை நீக்கப்படவேண்டும்."

இவ்வாறு மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் விஷேட நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக் கூட்டம் சட்டத்தரணி இ. சிவரத்தினம் தலைமையில் நடைபெற்றது. அத் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"வடபகுதிக்கான எரிபொருள் தடை உட்பட பொருளாதார தடையை அரசு தளர்த்தியிருப்பதாக அறிவித்திருப்பது வெறும் பெயரளவிலான ஒன்றேயாகும். எரிபொருள் தடைக்கு எதிராக நடாத்தப்பட்ட மக்கள் எதிர்ப்பு இயக்கத்தின் விளைவாக அரசு இத் தளர்த்தல் முடிவுக்குவந்ததாயினும்அதன் புதிய நடைமுறைகளும் கட்டுப்பாடுகளும் மக்களை எரிபொருள் பெறுமல் தடுக்கக் கூடிய நிலைமைகளையே தோற்றுவித்துள்ளன.

ஏற்கனவே எரிபொருள் தாராளமாக வழங்கியது போன்று மீண்டும் விநியோகிக்கும்படி மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் அரசை வற்புறுத்துகிறது.

"எரிபொருள் பெறுவதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை அகற்றும்வரை மக்கள் எதிர்ப்பியக்கத்தை தொடர்ந்தும் நடாத்த வேண்டும்."

---

# ராக்கெட் வெடித்தது குறித்து ஆராய்ச்சி

புதுடில்லி, மார்ச் 25

இடைநடுவில் வெடித்துச் சிதறிய இந்திய ராக்கெட்டான ஈ. எஸ். எல். வி. -1 குறித்து இந்திய விண்வெளி மத்திய ஆராய்ச்சி நிலையம் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

ஸ்ரீஹரி கோட்டாவிலிருந்து இந்த ராக்கெட் நேற்றுமுன்தினம் ஏவப்பட்டது. ஏவப்பட்டு 52 செக்கன்களில் இந்த ராக்கெட் வெடித்து வங்காள விரிகுடாவில் வீழ்ந்ததென்று தெரிவிக்கப்பட்டது.

---

# உற்சவம்

அராலி, புதன்

சங்கரத்தை அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் ஏப்ரல் 3ந் திகதி வெள்ளிச்சிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினெரு தினங்கள் நடைபெறவிருக்கிறது.

---

# முற்பணம்

பலாலி, புதன்

யாழ். மாவட்ட சுகாதார சேவை ஊழியர்களுக்கு புத்தாண்டு முற்பணம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

யாழ். மாவட்டத்தில் தற்காலிக ஊழியர்கள் உட்பட சகல தர சுகாதாரசேவை ஊழியர்களுக்கும் புதுவருட முற்பணம் ரூபா 500 வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முற்பணம் பெறுவதற்கான விண்ணப் படிவங்கள் சுகாதார சேவைகள் பணிப்பா ர் அலுவலகத்திலிருந்து சகல வைத்திய சாலைகளுக்கும் அனுப்பிவைகப்பட்டுள்ளது.

---

## எரிபொருள் தடை தளர்வு:
# உலகநாடுகளை திருப்தி செய்யும் முயற்சி

நெல்லியடி, புதன்

"எரிபொருள் தடையை அரசு தளர்த்தியதாகக் கூறுவது உண்மையில் பிரச்னையை திசை திருப்பவும் அதே வேளையில் உலக நாடுகளைத் திருப்திப்படுத்தவும் எடுக்கும் முயற்சியேயாகும்"

இவ்வாறு வடமாராட்சி பிரசைகள் குழு ஒன்றியத் தலைவர் திரு. ஜே. ஜீ. இராசேந்திரம் நெல்லியடி பிரசைகள் குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

சட்டத்தரணி திரு. வி. மகாலிங்கம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. இராசேந்திரம் மேலும் கூறியதாவது. "விரைவில் கடனுதவிக்காக வெளிநாடுகளுக்குச் செல்லவிருக்கும் நிதியமைச்சருக்கு சாதகமாக இருப்பதற்காகவே இலங்கை அரசு வளைந்து கொடுப்பதாக நடிக்கிறது. உண்மையில் இலங்கை அரசு சமாதானமான அரசதீர்வு ஒன்றை விருப்பினல் தனது நாட்டின் ஒருபகுதியினரான தமிழ் மக்கள் மீது போர் தொடுக்க வேண்டிய அவசியம் இல்லை மற்றுந்தாய் மனப்பான்மையுடன் தமிழ் மக்களை அணுகும் அரசு உண்மையில் பிரச்சினையைத் தீர்க்குமா என்பது கேள்விக் குறிதான். எனினும் தமிழ் மக்கள் தங்கள் அபிலாஷைகளை அடையும் நோக்கத்தை விட்டுக் கொடுக்காது, ஆக்கபூர்வமான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்."

---

## ஆச்சிரம முற்றுகையை எதிர்த்து
# மௌன ஊர்வலம்

நெல்லியடி, புதன்

தோலகட்டி செபமாலைதாசர் ஆச்சிரமத்தில் அரசப் படைகள் குடியேறி, அதன் புனிதத் தன்மையை அசுத்தப்படுத்துவதை எதிர்த்து கரவெட்டி மக்கள் இம் மாதம் 28ம் திகதி சனிக்கிழமை கரவெட்டி அர்ச் மரியாய் மாதா கோவிலிலிருந்து வதிரி அர்ச் அந்தோனியார் ஆலயத்துக்கு ஒரு மௌன ஊர்வலத்தை நடாத்தவுள்ளனர்.

இவ்வூர்வலத்தில் அரசாங்கத்தின் ஜனநாயக விரோத, அராஜகப் போக்கினை கண்டித்து, சுலோக அட்டைகளை மக்கள் தாங்கிச் செல்லவுள்ளனர்.

வதிரி புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறவுள்ள பொதுக் கூட்டத்தில் பல பிரமுகர்கள் உரையாற்றுவர்.

கரவெட்டி பங்குத் தந்தை வண. பிதா. எச். ஆர். சகாயநாயக அடிகளார் கூட்டத்துக்குத் தலைமை தாங்குவார்.

---

## பிரிவினைக்கு ஆதரவாம்
# இரு தமிழ்ப் படங்களுக்குத் தடை

யாழ்ப்பாணம், புதன்

இரு தமிழ் திரைப்படங்கள் முற்றுகத்தடை செய்யப்பட்டுள்ளதுடன், ஒரு படத்தின் பாடல் ஒன்று தணிக்கையும் செய்யப்பட்டுள்ளது.

டை செய்யப்பட்ட படங்ள் புலிகளுக்கு ஆதரவானதாக அல்லது ஏதோ ஒரு வகையில் சாதகமானதாக இருப்பதாக தணிக்கை சபை கருதுகின்றதாம்.

'விக்ரம்' என்ற படத்தில் வரும் பாடல் ஒன்று புலிகளுக்கு ஆதரவான கருத்து கொண்டிருந்ததால் அது தணிக்கை செய்யப்பட்டுள்ளதாம்.

தடை செய்யப்பட்ட படங்கள் பிரிவினைக்கு ஆதரவளிப்பவையாக இருந்தது ன் ஏற்கனவே ஒரு படத்தில் சாவகச்சேரி பொலிஸ் தாக்குதலையொத்த விதத்தில் வரும் காட்சியொன்று முற்றுகத் தணிக்கை செய்யப்பட்டுள்ளதாம்.

---

# சீரான பஸ் சேவை

மன்னர், புதன்

மன்னரில் தற்சமயம் பஸ் சேவைகள் சீராக நடைபெறுகின்றது. கொழும்பு இ. போ ச. பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மற்றைய இடங்களுக்கு முன்னைவிட சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மன்னர் வவுனியா இ. போ. ச. இணைப்பதிகாரி ஜனுப் எஸ். கபூரின் முயற்சியினல் 2 இலட்சம் ரூபா பெறுமதியான உதிரிப்பாகங்களும் 4 புதிய பஸ் ஞம் மன்னருக்கு வந்துள்ளன. இதனல் எரிபொருள் தட்டுப்பாடான வேளையிலும் மனனர் மக்கள் குறைந்த செலவில் பிரயாணம் செய்யக் கூடியதாகவுள்ளது.

---

## யாழ். நகரிலிருந்து
# வெளியேறிய ஐம்பது குடும்பங்கள் நவாலியில் தஞ்சம்

சுண்டுக்குளி, புதன்

நவாலி சென் பீற்றேஸ் தேவாலயத்தில் ஐம்பது குடும்பங்கள் அகதிகளாக வந்து தஞ்சமடைந்துள்ளனர்.

கடந்த திங்கள் அதிகாலை தொடக்கம் யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினல் தமது வீடுகளை விட்டு வெளியேறிய கொட்டடி, நாவாந்துறை, முள்ளி ஆகிய இடங்களைச் சேர்ந்த சுமார் ஐம்பது குடும்பங்கள் மேற்படி தேவாலயத்தில் வந்து தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு அப்பகுதியில் பொது ஸ்தாபனங்கள் நவாலி முருகானந்தா சன சமூக நிலையம், சென் பீற்றேர்ஸ் சன சமூக நிலையம், வை. எம். சி. ஏ. கிராம அபிவிருத்திச் சங்கம், நவாலி பிரஜைகள் குழு ஆகியவை முன்னின்று உணவு உடை மற்றும் இவர்களுக்கு தேவையான உதவிகளையும் பொது மக்களின் ஒத்துழைப்புடன் செய்து வருகின்றன.

## மணிவாக்கு

முறைகோடி மன்னன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் செயல்.

—குறள்.

(அரசன் தெய்வநீதி தவறுவானுயின், தெய்வ அம்சமாகிய வானம் தன் நீதி தவறி மழை பெய்யாது.)

# நமதுநோக்கு

## சமாதனம் வேண்டில் இரா ணுவமே வெளியேறு!

“வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்” என்று அப்பர் அடிகள் இறைவனை இறைஞ்சியதுபோல் நாம் இலங்கை ஜனுதிபதியின் அன்றைய கூற்றை இன்று நினைவு கூருகின்றோம்.

“போர் என்ருல் போர்; சமாதானம் என்ருல் சமாதானம்” என்ற ஜனுதிபதி அவர்களின் வெருட்டுடன் ஆரம்பமானதே இன்றைய ஆட்சி.

இம்மாதம் 7ம் தேதி யாழ். நகரில் காலேயும் மாலேயும் இலங்கை இராணுவம் நடத்திய தாக்குதலின் கோழைத்தனத்தை அறிந்தவர்கள் அரசின் ‘சமாதான’ புருடாக்களில் நம்பிக்கை கொள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தில் குறிப்பாக யாழ்நகரில் இராணுவம் நீண்டகாலம் கூதல் காய்வது அனைவருக்கும் அபாயமென்று நாம் ஏற்கனவே கூறிவந்தோம்.

வெற்றி நமதே என்ற மிதமிஞ்சிய நம்பிக்கையில், அடிக்கடி ‘சமாதானம்’ என்று செப்படிவித்தை காட்டிவருகிருர் பாதுகாப்பமைச்சர். அவரும் அவருடைய சகாக்களும், அதி உத்தம ஜனுதிபதியின் கண்டிப்பான ஆட்சியில் படைப் பலத்தை அதிகரிப்பதில் அதிகம் அக்கறைசெலு னர்.

இந்தியப் பிரதமருக்கு ட்டுவந்த புருடா, தமிழ்ப் போராளிகளில் பலிக்குமென்று நினைத்தது முட்டாள்தனம்!

‘எமக்கேன் இந்தியா? நாமும் பேசித் தீர்த்துக் கொள் வாம்” என்ற கபடத்தை நாம் இங்கு ‘டிரோயின் மரக் குதிரை’ என்று எச்சரித்திருந்தோம்.

அவ்வித எச்சரிக்கை ஏதுமின்றி சூழ்நிலேயை மதிப்பிடும் நுண்மதி எமது போராளிகளுக்கு நிரம்ப உண்டு. இந்தியாவின் உதவி ஆபத்தில் கிட்டவில்லே ஆனும் அதனைப் பொருட்படுத்தாது வெம்போரில் தொடர்ந்த வீரம், மன உறுதி, தேசப்பற்று; இலங்கை இராணுவத்துக்கு எவ்வாறு கிட்டும்?

இலங்கை இராணுவம் தமிழ்ப் பகுதியில் வதிவதேன்? தங்கள் நாட்டுக்கு ஆபத்து ஏதும் உண்டா? இருந்தால், தெற்குநோக்கிச் செல்லவும் அங்கு அரசுக்குத்தலே புழுத்த தொல்லேகள் உண்டு.

தமிழ் அப்பாவி மக்களேக் கொல்லுதல் யுத்த தர்மம் அல்ல; போரில் வீரமோ வெற்றியோ அல்ல.

வடக்கிலும் - கிழக்கிலும் போருக்கு என்ன அவசியம்? இங்கு வாழும் மக்கள் இனியாவது அமைதியாக வாழவேண்டுமானுல் இலங்கை இராணுவம் வெளியேற வேண்டும்.

இலங்கை அரசுக்கு இன்று மிக அவசியமானது போர் நிறுத்தம். கூலிப்படைகளிலும் அவற்றின் ஒப்பந்தக்காரர்களிலும் நப்பிமோசம் போனது போதும்.

மீண்டும் அவசியம் எனக் கருதும் இந்திய உதவியை ஏலினம் செய்யாது திடமான சமாதானத்திட்டத்தில் அதன் விசுவாசத்தைப் பெறுவதேஇத்தர்ம சங்கடத்தைத் தீர்க்கும் ஒரேயொருவழி.

புலிகளேத் தூஷிப்பதும் தமிழ்மக்களே அவதூருக வரைவதும் அரசாங்கத் தினசரிகளின் நாளாந்தக் கடமை. இது விரக்தியின் வெளித்தோற்றம்; தோல்வியின் அறிகுறி. இலங்கை இராணுவமும் போஷகா பாதுகாப்பு அமைச்சரும் நடத்திவரும் அரும்பெரும் சாதனேகள் உலகனைத்திலும் பிரசித்தமானவை: மனித உரிமைகள் மீறப்பட்ட கொடுமைகள்.

எனவே தம்முடைய உள்ளம் நிறைந்தவஞ்சனையைக் கொண்டு, ஒருபெரும்இனத்தின் பாதுகாப்புக்காகத் தங்கள் உயிரைஅர்ப்பணிக்கும் போராளிகளே ‘பயங்கரவாதிகள்’ என்று அவமதிப்பதும் இயலாதகட்டத்தில் சமாதானம்என்று பாசாங்கு செய்வதும் எவரையும் ஏமாற்றுமா?

இன்றைய நிலேயில் இப்போர் எங்கு தொடங்கியதென்று கணிப்பது கடினம். பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்கள், உடைமைகள் அழிந்தது மட்டுமல்ல எந்நேரமும் அழிவுக்குத்தயராகும் நிலே உருவானதால் போர் நிறுத்தம், சமாதானம் விரும்பாதவர் யார்?

இன்று வரை, இது பற்றிப்பேசிய பேச்செல்லாம் வெறும் கபடம். இராணுவ வெற்றியே உண்மையான நோக்கம் என்பதால், போராளிகள் அவ்வகையில் சிந்திப்பதை எவ்வாறு தடுக்கலாம்.

இந்தியா மட்டுமே இக்கொடுமையை நிறுத்த முடியுமென் ...ரலிட்டுக் கனேத்து விட்டோம். இன்றைய சூழ்நிலேயில் உலக அரசியல்பிணக்குகளில் இதுசிக்கிவிடுமேஎன்ற அச்சம் உருவாகிறது.

1983ல் முடிவடையவேண்டிய ஆட்சி, பெரும் புகார் கிளப்பியிருக்கும் பொது ஜனவாக்கெடுப்பால் உயிர்த்திருக்கிறது. இம்மறு பிறப்பே நாட்டின் அவலங்கள் அனைத்துக்கும், குறிப்பாக இப்போர் தொடர்வதற்கும் காரணம்.

இந்தியாவிற்கு வாழ்வென்ருல் தமக்குத் தாழ்வென்று தப்புக்கணக்குப் போடும் இலங்கை அரசு உழுத்துப்போன கருத்துகளேக் கைவிட்டு இந்தியாவின் வழிகாட்டலுக்கு மதிப்பளிப்பது அரசியல் விவேகம்.

ஆட்சியின் தலேமைக் குண்டான போட்டி தற்காலிகமாக நிறுத்தப்பட வேண்டும். நாட்டின் உய்வுக்கு போர் நிறுத்தம் முதற்படி. அதற்கு அமெரிக்காவோ, அதன் பிரதம சீடன் பாகிஸ்தானே அதிகம் உதவாது.

இது கசப்பான பாடம்; ஆனுல் நாட்டைக் குணப்படுத்துவதற்கு உதவும். வருங்கால வாழ்வுக்கு வழி இந்தியா. இது தவிர்க்க முடியாதென்பது தெளிவுவாகும்.

நியாயத்துக்குக் கட்டுப்பட்ட தமிழ்ப் போராளிகள் இந்தியத் தலே மத்துவத்திற்கு சிரம் தாழ்த்த வல்லவரென்று நம்பலாம்.

---

உலக அரசியல் — அவதானி

# ஜனநாயகத்தின் காவலர் இருவரின் ஆட்சித் தர்பார்

**உலகின் மிகப் பெரிய வல்லரசு, அதுவும் ஜனநாயக அரசு என்று பறைசாற்றும் அமெரிக்க ஜனுதிபதி ரீகன், தமது நிர்வாகம் செய்த தவறுகளேத் தாமே அம்பலப்படுத்துகிருர்!**

**உலகின் மிகச் சிறிய நாடுகளில் ஒன்ருன இலங்கையின் ஜனுதிபதி நாட்டின் கொந்தளிப்பும் குமுறலும் உச்சக் கட்டத்தை எட்டிய அளவில், ஜனநாயக ஆட்சியைப் பேணுவது பற்றிப் பேசுவது அரசியல் கோமாளித்தனம்.**

### ஈரான், கொன்ட்ராஸ் விவகாரம்

உலகைக் கட்டி ‘அவிழ்க்கும்’ பொறுப்பை பிரிட்டனிடமிருந்து கைப்பற்றிய அமெரிக்க வரலாறு இன்று உலகில் காணப்படும் அத்தனை பேருக்கும் அடிப்படைக் காரணமாகின்றது.

ஜனநாயக நாடுகளின் ‘கப்டன்’ ரீகன் எங்கெங்கே ஜனநாயகத்திற்கு ஆபத்துண்டோ கம்யூனிச ஊடுருவலுக்கு ஆதரவுண்டோ அங்கெல்லாம் இராணுவ உதவி, நிதியுதவி வழங்கவும் அக்கம் பக்கங்களில் கடற்படைத் தளங்கள் நிறுவவும் பின்நிற்கவில்லே. இன்றைய போர் முறையில் இந்த ‘ஜனநாயக பாதுகாப்பு’ என்ற பேரியக்கம் அநியாயமான இராணுவத்தலேயீட்டை உலகின் பல பாகங்களிலும் அறிமுகப்படுத்தியிருக்கிறது. பல பெரிய போர்களில்-வியட்நாம்- நேரடியாகப் பங்குபற்ற வேண்டிய பொறுப்பையும் உண்டாக்கியது. அத்தகைய போர்களில் கண்டதோல்வி அமெரிக்க ஆட்சியின்கண்ணைத் திறக்கவில்லே. ஜனுதிபதிகள் ஜோன்சன்’ நிக்ஸன், போர்ட், காட்டர் கண்டதோல்விக்குப் பின் இன்று நடப்பதென்ன?

இன்று லத்தின் அமெரிக்காவில் கம்யூனிசம் பரவாதபடி கெரில்லாப் போராட்டத்திற்குப் பெரும்நிதியுதவி வழங்குவதில் வெற்றி பெற்ற ரீகன், இன்றைய செல்வாக்குக் குறைந்த நிலேயிலும் தமது நிர்வாகத்தின் சுழி ஓட்டத்திற்கும் புத்துயிர் அளிக்க முடிந்தது. வியப்பிலும் வியப்பு!

அமெரிக்க மக்களுக்கு கம்யூனிசத்திலிருக்கும் வெறுப்பும் அச்சமும் சர்வாதிகாரப்போக்குடைய எந்த ஜனுதிபதியையும் உலகில் இன்னெரு யுத்தத்தை உருவாக்க உதவும்.

இயக்கை வளம் மிகுந்த திருகோணமலே தனது முந்திய கேந்திரத்தை இழந்தபோதும் அங்கும் ஒரு ‘கடற்படைனர் தங்குமிடம்’ ரீகன் ஆட்சிக்குக் கிடைத்திருக்கிறது. ‘அமெரிக்கக் குரல்’ கொழும்பிலிருந்து தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளுக்கு ‘ஜனநாயக தத்துவம்’ விளக்கும் செய்திகளே சுடச்சுட விளக்குகின்றது.

### கடந்த நவம்பர் தொடக்கம்

“பணயக்கைதிகளே விடுதலே செய்விப்பதற்காக ஆயுதங்களை நாங்கள் விற்பனை செய்யவில்லே. ஏனைய நாடுகளிலிருந்து ஈரானுக்கு ஆயுதங்கள் அனுப்பியதை நாம் ஆதரிக்கவில்லே. இன்றும் அதனை மன்னிக்க முடியாத குற்றமெனக் கொள்கின்ருேம்.”

“பணயக் கைதிகளே விடுவிக்க ஈரானுடன் உண்டான எங்கள் இரகசியஆயுதவிற்பனே விடயத்தில் மூன்ருவது நாடு ஒன்று சம்பந்தப்பட்டிருக்கிறது.”

“நாங்கள் செய்தது சரியானது. தொடர்ந்தும் அந்தப் பாதையில் செல்லப் போகிருேம்.”

### கடந்த ஜனவரி

“எங்கள் இலட்சியங்கள் உன்னதமானவை. ஆனுல் அவற்றைச் சாதிப்பதில் தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன.”

### பெப்ரவரி

“ஈரானுக்கு ஆயுதங்களே அனுப்புவதற்கு நான் ஏற்கனவேஅனுமதி அளிக்கவில்லே”

“ஈரானுக்குஆயுதங்கள் விற்பதற்கு இஸ்ரேலுக்கு உத்தரவு அளித்தேனே என்பது குறித்து எனக்கு ஞாபகமில்லே.”

### மார்ச்

“ஈரானுக்கு ஆயுதங்களே விற்பனே செய்த விடயத்தில் நான் பிழைவிட்டுவிட்டேன் என்பதை ஒத்துக்கொள்கிறேன். இதனே எதிர்த்த இராஜாங்க அமைச்சர் ஷுல்ஸும் பாதுகாப்பமைச்சர் வெயின் பேர்க்கரும் இன்று சரியென்பது தெளிவாகிறது. அவர்கள் ஆலோசனையை நிராகரித்த என்னுடைய முடிவு பிழையாக முடிந்திருக்கிறது.”

“பணயக் கைதிகளே விடுவிப்பதற்காகவோ அல்லது ஈரானுடன் தொடர்புகளே வளர்ப்பதற்காகவோ இதுவரைசென்ற பாதையில் நான் மீண்டும் செல்லமாட்டேன்.”

“கொன்ட்ராஸ்களுக்கு ஈரான் இலாபப் பணம் திசை திருப்பப்படுவதாக என்னிடம் கூறியதாக வெள்ளே மாளிகை அதிகாரி பாயின் டெக்ஸ்டர் தெரிவித்த செய்திகள் பொய்யானவை.”

இலங்கை உட்பட உலகில் ஜனநாயகத்திற்கு அவலம் ஏற்படும் நாடுகள் அனைத்திற்கும் பாதுகாவலரென்ற பொறுப்பேற்ற அமெரிக்க அதிபர் ரீகன் படும்பாடு இது. இதனைப்பூசி மெழுகும் பலத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

## இலங்கையில் ‘ரீகனிஸம்’ என்ற தத்துவத்தை இனங்காணும் வாய்ப்பு உண்டா?

இந்தியப் பெருங்கடல் நாடுகள் இப்பிரதேசத்தை ‘அமைதிப் பிராந்தியம்’ என்று பிரகடனம்செய்யவேண்டும் என்ற பிரதமர் இந்திராவின் வற்புறுத்தல், அன்றைய இலங்கைப் பிரதமர் அதன்வழி அப்பிரகடனத்தை முன்மொழிந்தமை யாவும் இன்று அமெரிக்க அரசியற் சூழ்ச்சியால் சிதைவுற்றன. இதுபற்றிய மாநாடு நடைபெறுவது நீண்டகாலம் தடைபெற்றிருக்கிறது.

திறந்த பொருளாதாரம்என்பது ரீகனிசம் என்பதும் உலகறிந்த விஷயம் இந்துமாகடல்மாநாட்டைத்தாமதப்படுத்துவதும், பாகிஸ்தானுக்கு இந்தியாவை அடக்கிவைக்க உதவும் ஆயுத உதவியை வழங்குவது, பாகிஸ்தானின் அணு ஆயுத உற்பத்திக் கட்டுப்பாட்டைத் தளர்த்தி, இந்தியாவிற்கெதிராகப் பயங்கர ஆயுதங்கள் வழங்குவதிலும் ரீகன் இன்னும் விடாப்பிடியாயிருப்பது எவருக்கு விளங்காத இரகசியமா?

வடக்கில் பாகிஸ்தானேக் கிள்ளிவிட்டு, தெற்கில் இலங்கைக்கு ஆதரவாக; ‘சமாதானம் வாழ்க’ என்று வாழ்த்துவதும் இந்தியாவை நிலேகுலேக்கும் செயல். சோவியத்திற்கு நண்பனுன, சீனுவின் எதிரியை அடக்கும் தீயசக்திகளுக்கு உதவும் அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கை சிவில் யுத்தத்தில் அக்கறை கொண்டவையே.

இதற்கு மேலாக இவ்வித சண்டை தங்களுக்குப் பாதகமற்றது என்பதால் அதற்கு ஆயுதவிற்பனே செய்வதிலும், கூலிப்படைகளே அனுப்புவதிலும் சற்றும் தயங்கமாட்டா.

### ‘தமிழ் ரைம்ஸ்’ செய்தி

இதற்கு நேர்மாருக ஆங்கிலேயரின் வாழையடி வாழையென வந்த ‘நீதி’ யென்ற பண்பு நிறைந்த அவெபரி பிரபு (Lord Avebrv) இலங்கை பற்றி அமெரிக்காவில் நடந்த சர்வதேச(உஷார் நிலே) கருத்தரங்கில் நிகழ்த்திய பேருரையில், நடுநிலேயில் நின்று, இன்றைய போரை நிறுத்தி, தனிநாடல்லாத, ஆனுல் அதன் உள்ளுடனேப் பிரதிபலிக்கின்ற ஓர் தீர்வு காண்பது கடினமல்ல; உண்மையான தீர்வு காணும் விடாய் ஏற்படுவதே முக்கியம் என்று மிக விரிவான உரைநிகழ்த்தியிருக்கிருர். இவ் விரிவுரை லண்டனிலிருந்து வெளிவரும் ‘தமிழ் ரைம்ஸி’ல் வெளிவந்திருக்கிறது.

இருபத்தினரும் தீவிரமான நிபந்தனைகளேப் பேச்சுக்கு முன் நிறுத்துவதே, பேச்சுக்களின் தோல்விக்குக் காரணம் என்கிருர் அவெபரி பிரபு. இன்னும் சில அரிய பெரிய கருத்துக்கள். போரின் பாரிய உயிரிழப்பால் போராளிகள் தீவிர முடிவில்லாப்பிடிவாதம் கொள்வது இயற்கை. ஆனுல் அது விவேகமற்றது. அதேசமயம் வெறும் மாகாணசபை இன்றைய போரின் நிரந்தரமான முடிவல்ல. ஜனுதிபதி எந்நேரமும் கலேக்கக்கூடிய மாகாணசபை, கிராமசபை ஜோடனேப் பந்தலே.

தமிழ்மக்கள் கோரும் ‘தம் பரம்பரைப் பிரதேசம்’ சிக்கல் நிறைந்த கோரிக்கை. அதனேப் படிப்படியாக அவிழ்ப்பதே புத்திசாலித்தனம். கனடாவில் ‘குவிபெக்’ மக்கள் பெற்ற சுயாட்சி மிக விவேகமான செயல். சண்டையில்லாது சமஷ்டி ஆட்சியின் கோட்பாட்டில், தக்க சுயாட்சி பெற்றிருக்கின்றனர். கனடாவின் மாநிலமாக ஆனுல் குவிபெக் மக்களின் இறைமைக்குரியமாகாண

(5-ம் பக்கம் பார்க்க)

## கோட்டை

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யும், 5 சிப்பாய்களையும்பார்க்க வந்த மக்கள் பேசிக்கொண்டனர்.

சிறைப்பிடிக்கப்பட்ட படையினர் நேற்று முத்திரைச் சந்தியில் மக்கள் பார்வைக்காக இருத்தப்பட்டனர். சற்றுத் தூரத்தில் ஹெலிகொப்டர்கள் சுழன்று சுழன்று சரமாரியாகச் சுட்டுக் கொண்டிருந்த போதிலும், நிழல்தரும் மரங்களின் கீழே அமர்த்தப்பட்டிருந்த கைதிகளையும், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட நவீனரக ஆயுதங்களையும் ஆயிரக்கணக்கான மக்கள் வெயிலையும் பொருட்படுத்தாது வரிசையாகச் சென்று பார்த்தனர்.

## இலங்கையில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சிமுறையைக் கொண்டிருக்கின்றது. தமிழ் மாநிலம் என்ற ஆட்சிமுறை செவ்வனே செயற்பட்டால் தமிழ் மக்கள் ஏனைய மக்களைப்போல் எல்லாத் துறைகளிலும் சரிநிகர் சமானமான உரிமைகள் பெறுவது சாத்தியம்.


யாழ்ப்பாணம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)

### வெற்றுச் சாக்கு கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் 2813 வெற்றுச்சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்குண்டு.

கேள்வி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதி 28-03-87. கேள்வி விண்ணப்பங்கள் அரக்கு முத்திரை போடப்பட்டிருத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.
259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
25-03-87.
[ஏ-3776]


### கடைசிநேர வரிவிளம்பரம்


காணவில்லை

நா. மாணிக்கராசா, 12 வயதுடைய சிறுவன் 12-03-87 தொடக்கம் காணமல் போய்விட்டார். இவர் மெல்லிய தோற்றமும், வெள்ளை நிறம், சுருளி, செம்பட்டை தலைமுடியுடையவர். கடைசியாகஉடுத்திருந்த உடுப்பு நீலச் சேட்டும் சாரமும். தகவல் கொடுப்போருக்கு சன்மானம் வழங்கப்படும். நா. ஆனந்தராஜா, 224/47, நியூ லலிதா கட்டடம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [சி-8219]



LIDO
From Today
Daily at 10-30 a.m.
2-30 & 4-30, 6-30 p.m.
MAX DUGAN RETURNS
(colour & action)

புதிய வெளியீடு
வெலிங்டன் திரையில்
Super Star Bruce Lee in
THE MAGNIFICENT KICK
(Karate Film)
புருஸ்லீ நொடிநேரத்தில் 3 முறை உதைக்கும் பயங்கர கராட்டிகள் நிறைந்தது.


## 5லட்சம்ரூபாசேதம்

[பண்டத்தரிப்பு நிருபர்]

யாழ் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை ஷெல் விழுந்ததால் ஏற்பட்ட சேதம் சுமார் மூன்று ரூபா இலட்சம்.

## இன்றும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் நடத்தி விடுதலைப் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்ட பொலிஸார், இராணுவத்தினர் இன்றும் மக்கள் பார்வைக்காக வைக்கப்படுவரென விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். (கே)

## யுத்தக் கைதிகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேட்டியின்போது குடாநாட்டு புலிகளின் தளபதி திரு. கிட்டு இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

யாழ்ப்பாணம் பண்ணை பொலிஸ் நிலைய விடுதித்தாக்குதலைப் பொறுத்தளவில் சுமார் மூன்று மணித்தியாலங்கள் வரை நீடித்தாலும் மிகச்சுலபமாக எம்மால் அவர்களைக் கைதுசெய்ய முடிந்தது. இத் தாக்குதலில் நூற்றுக்கும் குறைவான போராளிகளே ஈடுபட்டிருந்தனர்.

பொலிஸ் நிலைய விடுதித் தாக்குதலின்போது; தாக்குதலுக்கு முன்னரோ அல்லது அதற்குப் பின்னரோ எம்மால் எந்தவிதமான கோஷங்களும் எழுப்பப்படவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இந்திய அரசுக்கும், தமிழ்நாடு அரசுக்கும்மாறானவர்கள்என்ற தவறான பிரசாரத்தில் சிறிலங்கா அரசு ஈடுபட்டுள்ளது.

ஆனல் எம்மைப் பொறுத்தவரையில் நாங்கள் இந்திய அரசுக்கோ, தமிழ்நாட்டு அரசுக்கோ எந்த வகையிலும் மாறானவர்கள் அல்ல என்பதை வலியுறுத்திக் கூறுரோம்.

இப்பொழுது எம்மால்கைதுசெய்யப்பட்ட மூன்று பொலிஸாரும், ஐந்து இராணுவத்தினரும் எமது பாதுகாப்பில் இருக்கிறார்கள். இவர்களை விடுதலை செய்வதுசம்பந்தமாக எந்தவிதமான நிபந்தனைகளும் இதுவரை எம்மால் விதிக்கப்படவில்லை. ஆனல் அரசு கைதிகள்பரிமாற்றம் சம்பந்தமாக எம்முடன் தொடர்புகொள்வார்கலானல் கைதுசெய்து காவலில்வைக்கப்பட்டுள்ள எமது இயக்கப் போராளிகளை விடுதலைசெய்யுமாறு கேட்போம் இந்த யுத்தக்கைதிகள் விடயத்தில் அரசு மௌனம் சாதிக்குமானல் இவர்களைநிரந்தரயுத்தக்கைதிகளாக வைத்திருப்போம்.

தமிழீழத்துக்காக பல நூற்றுக்கணக்கான வீரவேங்கைகளையும், அப்பாவிப்பொதுமக்களையும் இழந்தனர் தமிழ் தாயகத்திற்குக் குறைவான எந்தவொரு இடைக்காலத் தீர்விலும் எமக்கு நம்பிக்கை இல்லை.. அத்துடன் அத்தகைய தீர்வுகளை நாம் ஏற்று தமிழினத்தின் துரோகிகளாக மாட்டோம். எல்லாவற்றிற்கும் மேலாக எமது போராளிகளின் இராணுவபலத்தில் நம்பிக்கை கொண்ட நாம் இறுதியில் தமிழீழத் தாயகத்தை மீட்போம் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லையென உணர்ச்சியுடன் கூறினர்.

## முத்திரைச்சந்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நோல் பார்வையிட்டார். அச்சமயம் தொலைவில் நாவற்குழி பக்கமாகவிருந்து ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படும் சத்தம் கேடட்படி இருந்தது.

இருஹெலிகாப்டர்கள் கண்காட்சி நடைபெற்ற இடத்துக்கு அருகே மேலாக வட்டமிட்டுத்திரிந்ததைக் காண முடிந்தது

கைதிகள் இருத்திவைக்கப்பட்ட இடத்துக்கு இடப்பக்கமாக வாங்குகள் போடப்பட்டு அவற்றின்மீது பண்ணைவிடுதித் தாக்குதலின்போது கைப்பற்றப்பட்ட சகல ஆயுதங்களும் காட்சிக்காக வைக்கப் பட்ருந்தன இந்த எண்மரில் ஒருவரின் முழங்காலில் காயம் பட்டு மருந்துகட்டப்பட்டிருந்தது.

கைதிகளில் ஒருவரைத்தவிர ஏனையவர்கள் கைதானபோது அணிந்திருந்த உடையுடனேயே அணிந்திருக்கக்காணப்பட்டனர்.

மன்னார் அடம்பனில் விக்டர் தலைமையில் புலிகள் இயக்கத்தினர் மேற்கொண்ட தாக்குதலின்போது புலிகளினல் கைதுசெய்யப்பட்ட இரு சிப்பாய்களின் விடுதலையின் பொருட்டு அரசாங்கத்தினல் விடுதலை செய்யப்பட்ட புலிகள் இயக்க முக்கியஸ்தரான அருணா கண்காட்சி இடம் பெற்ற இடத்துக்கு வந்து கைதிகளுடன் உரையாடிவிட்டுச் சென்றார்.

கடும் வெய்யிலையும பொருட்படுத்தாது, ஆண்களும், பெண்களுமாக,பொதுமக்கள் நீண்ட கியூவரிசையில் இராணுவ கைதிகளைப் பார்வையிட்டனர்.

## யாழ்.குடா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லிய உளவு நிறுவனமான மொசாட் அமைப்பைச்சேர்ந்தவர்களென்றும் ஏஜென்சி செய்தியொன்று தெரிவித்துள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- விசேட விமான மூலம் பலாலி வந்த இவர்கள் அங்கிருந்து தொண்டமனறு, கோட்டை. மற்றும் சில இராணுவ முகாம்களிற்கு ஹெலிகொப்டர் மூலம் அனுப்பப்பட்டுள்ளனர்

பலபிரிவுகளாக அனுப்பப்பட்டுள்ள இவர்கள் முகாம்களில் இராணுவத்தினருக்கு பயிற்சியளி பதில் ஈடுபட்டுள்ளனரென்றும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

## தோப்பூர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இனஒழிப்பை மேற்கொண்டு வரும் சிறிலங்கா இராணுவத்தினர் இஸ்லாமியரைப் பெரும்பான்மையினராகக் கொண்ட தோப்பூர் கிராமத்தில் முகாம் அமைத்து இருந்தனர். இம்முகாம் அமைக்கப்பட்ட பின்னர் பலர் இராணுவத்தால் கோரமாகக் கொல்லப்பட்டனர் என்பதும் பச்சைநூல், இழக்கந்தை போன்ற பலகிரமங்கள் வேட்டையாடப்பட்டன.

ஊர்காவல் படையினரும் இராணுவத்தினருடன் இணைந்து தமிழ் பேசும் மக்களைப் பிளவுபடுத்தும் சதிவேலைகளில் ஈடுபட இம்முகாம் பயன்பட்டு வந்தது பொம்பர்கள், ஹெலிகள்சகிதம் இராணுவத்தினரும் ஊர்காவல்படையினரும் இணைந்து நடாத்திய பாரிய தேடுதல் வேட்டையில் இப்பகுதிகளில பெரும் அழிவுவேலைகளில் இராணுவம் ஈடுபட்டிருந்தது. இன ஒழிப்பை மேற்கொள்ளும் நோக்கத்துடன் புறப்படவிருந்த சமயம் எமது தோழர்களால் நிகழ்த்தப்பட்ட ஆர் கே 155 ரக கொமாண்டோ மோட்டார்த் தாக்குதலில் 5 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத ராணுவம் 10அப்பாவி இஸ்லாமியர்களை பலிகொண்டதுடன் இஸ்லாமியருக்குச் சொந்தமான 5 வீடுகளையும் 2 கடைகளையும் நாசமாக்கியுள்ளனர் இச்செய்தி இஸ்லாமியருக்காகப் பரிந்து பேசும் அரசின் கபடநாடகத்தை அம்பலப்படுத்துவதாகும். (வா)

## மட்டு. போரதீவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மாவட்டத்தில், சம்மாந்துறையில் புதிதாக அமைக்கப்பட்ட அதிரடிப்படை முகாமிலிருந்து நேற்று பிற்பகல் 3 மணியளவில் களுவாஞ்சிக்குடிப்பக்கமாக, பட்டிருப்புப் பாலம் வரை 2 ஜீப், 1 பவல் கவச வாகனம், ஒருட்ரக் ஆகியவற்றில் கமாண்டோக்கள் தொடரணியொன்று சென்றது.

பின்அந்த அணி திரும்பி முகாம்செல்லும்போது பழுகாமத்திற்கும் போரதீவுக்குமிடையில் எமது போராளிகள் கவச வாகனம் மீது மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில், அதில் பிரயாணம்செய்த 15 கமாண்டோக்களும ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். கவச வாகனம் சுக்கு நூறுகியது. (கே)

## அரசு அறிவிப்பு

கொழும்பு, பத

மட்டு.போரைதீவில் போராளிகளால் நடத்தப்பட்ட நிலக் கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கி அதிரடிப்படையைச் சேர்ந்த இருவர் பலியானர்கள். மற்றும் மூவர் காயமடைந்தனர் என்று அரசு அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டது.

துப்பாக்கி வீரர்களான முதலி ஹாமி, பனமதெனி ஆகிய இருவருமே கொல்லப்பட்டதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கரையொதுங்கிய சடலம்

யாழ்ப்பாணம், வியா.

காரைநகர் கடற்கரையில் சுமார் 60 வயது மதிக்கக்கூடிய இனம் தெரியாத ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது. இதனைக்கண்ட அப்பகுதி மக்கள் இச் சடலத்தை நேற்று யாழ்: ஆஸ்பத்திரியில் ஒப்படைத்துள்ளனர்.

இச்சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளது. (கு)

## புலிகளின் போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், வியா.

நாவற்குழிஇராணுவமுகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' தாக்குதலுக்கு அரியாலைப் பகுதியில் காவற்கடமையில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளின் போராளி அரபாத் (ஜோன் பாலேந்திரா), நல்லூர், இலக்காகி வீரமரணமடைந்துள்ளார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைச் செலுத்தினர். (கே)

## யுத்தக் கைதிகளை மீட்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளினல் கடந்த திங்கட்கிழமை அதிகாலை கைதுசெய்யப்பட்ட மூன்று பொலிஸ் கொமாண்டோக்களையும், ஐந்து இராணுவ சிப்பாய்களையும் மீட்கும் பணியில் உயர் மட்ட அரசியல்வாதிகளும் இராணுவ உத்தியோகத்தர்களும் ஈடுபட்டுவருவதாகத் தெரியவருகிறது.

இதற்கான ஒரு குழுவொன்று பலாலி இராணுவ முகாமிற்கு வந்துள்ளதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன [கே]

## இராணுவம் சுட்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டைப் பக்கத்திலிருந்து வந்த துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானர்.

இச்சம்பவத்தை தொடர்ந்து பொலிஸ் பகுதி நேற்று பிற்பகல் 2 மணியுடன் மூடப்பட்டது. நேற்று பிற்பகல் வேலைக்கு வந்த சுமார் 25 பொலிஸ் உத்தியோகத்தர்கள் யாழ். ஆஸ்பத்திரியிலுள்ள பொலிஸ் பிரிவிலேயே கையொப்பமிட்டு வேலையைத் தொடர்ந்தனர். (கு)

## இயக்கத்தின் பெயரால் ஊதுபத்தி விற்பனை

யாழ்ப்பாணம்,வியா.

யாழ். நகரில் இயக்கத்தின் பெயரைச் சொல்லி வீடுகள் தோறும் சில இளைஞர்கள் ஊதுபத்திகளை கட்டாயப்படுத்தி விற்பனை செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

நேற்றுக் காலை இவர்கள் கொழும்புத்துறைப் பகுதிகளில் கட்டாயப்படுத்தி ஊதுபத்தி விற்பனை செய்தனராம்.

சில வீடுகளில் ஊதுபத்தி வாங்கத் தயக்கம் காட்டியபோது கட்டாயப்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

ஒவ்வொரு ஊதுபத்திப் பக்கெட்டும் 20 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டதாம்.

பாதிக்கப்பட்டவர்கள் இது பற்றி அப்பகுதி விழிப்புக்குழுவுக்கு நேற்றுப் புகார் செய்துள்ளனர்.

### இடமாற்றம்

நெல்லியடி, புதன்

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மருத்துவ அதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுக் கடமைகளை ஏற்றுள்ளார்.


நியூ விக்ரேர்ஸ்
புதிய வீடியோ பட வெளியீடுகள்
(1) காளியூர் காத்தான் ★ சிரஞ்சீவி, ★ ராதா
(2) சங்கர் குரு ★ அர்ஜுன், ★ சீதா
(3) சிவந்தமண் ★ சிவாஜி, ★ காஞ்சன
நியூ விக்ரேர்ஸ் எலக்ரோனிக்ஸ்
ஏ-3815



எமது புதிய வெளியீடுகள்
1. சிவந்த மண் (Shanth Master)
2. இரும்பு மனிதன் (Shanth Master)
3. சங்கர் குரு (R. V. V. Master)
4. காளியூர் காத்தான் (Pyramid Master)
5. மேகம் கறுத்திருக்கு (Suhan Master)
6. BRIDGE TO HELL (War Film)
குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665. (ஏ-3813)

### இலங்கையில் மனித உரிமைகள் மீறல் – 7

# 600க்கும் மேற்பட்ட தமிழர் 1985ல் கொல்லப்பட்டனர்

1985ம் ஆண்டு ஜூன் மாதத்துக்கும், அவ்வாண்டு டிசம்பர் மாதத்துக்குமிடைப்பட்ட காலப்பகுதிகளில் 600க்கு மேற்பட்ட தமிழ்ப் பொதுமக்கள் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டனர்; பல நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமாக்கப்பட்டன, கொல்லப்பட்டோரில் பெண்கள், குழந்தைகளும் அடங்குவர். இவ்வன்முறைச்சம்பவங்கள் பெரும்பாலும் யாழ். குடாநாட்டுக்கு வெளியே இடம்பெற்றவை குறிப்பிடத்தக்கது.

ஜூன் 3ம் திகதி திருமலையில் பஸ்ஸொன்றின் மீது பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் குறைந்தது 13 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் மூவர் பெண்கள். ஜூன் 5ம் திகதி திரியாய் கிராமம் மீது இருஹெலிகாப்டர்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தின் போது பலர் கொல்லப்பட்டனர். கிராமமக்கள் பாதுகாப்புக் கருதி காடுகளுக்குள் தஞ்சம் புகுந்தபோது இக்கிராமத்தினுள் புகுந்த படையினர் சகல வீடுகளையும் தீ மூட்டினர். அத்துடன் ஒரு இந்துக் கோயில், வாசிகசாலை, பாடசாலை, தபாலகம் ஆகியவையும் சேதப்படுத்தப்பட்டன.

## மூதூரில் 200 பேர் கொலை

மூதூர் பகுதியிலுள்ள தோப்பூர், பாரதிபுரம், மல்லிகைதீவு, மணல்சேனை, கிளிவெட்டி, புளியடிசோலை, லிங்கபுரம், தங்கவெளி, சங்குவேலி ஆகிய கிராமங்கள் ஆயுதபாணிகளான சிங்களவர் உதவியுடன் பாதுகாப்புப்படையினரால் தாக்கப்பட்டன. இத்தாக்குதல்களின் போது 200க்கு மேற்பட்ட குடிமக்கள் இறந்தனர் எனக் கணிக்கப்பட்டுள்ளது. பலர் 'காணமற்போய்விட்டனர்', 1000க்கு மேற்பட்ட வீடுகள் எரிக்கபபட்டன.

ஜூன் 14ம் திகதி கொக்குட்டியான் (மன்னார்), வட்டக்கண்டல் கிராமங்களில் 13 பேரைப்படையினர் சுட்டுக் கொன்றனர்.

## வவனியா படுகொலை

வவனியா நகரில் ஆகஸ்ட் 16ம் திகதி துருப்பினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் 200க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.

## லண்டன் கார்டியன் அறிக்கை

இப்பத்திரிகையில் செய்தி செய்தியாளர் கிறிஸ்ரோபர் மூர் வவனியாவிலிருந்துஅனுப்பிய செய்தியறிக்கை:

"...வவனியா நகரம் அதிர்ச்சி நகரமாயுள்ளது. சடலங்களைக் கண்மூடித்தனமாக புதைத்தல் ஆகிய நடவடிக்கைகளே இங்கு நடைபெறுகின்றன. நம்பத்தகுந்த வட்டாரங்களின்படி 200க்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம்.

"வவனியாவின் துயரம் கடந்த வெள்ளிக்கிழமை தமது முகாமுக்குத்திரும்பிக் கொண்டிருந்த படையினர் மீது தமிழ்ப்பிரிவினைவாதிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலையடுத்து ஆரம்பமாகியது. இதனால் படையினர் எவரும் காயமடையவில்லையாயினும் இத்தாக்குதலால் அதிர்ச்சியடைந்த படையினர் உடனடியாக அயலில் வாழும் தமிழர் மீது வாங்கினர்.

"கண்ணி வெடிச்சம்பவம் இடம்பெற்றபின் குறைந்தது ஒரு மணித்தியாலயத்துக்காவது இப்பகுதியெங்கும் தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன. கொலைகள் நிறுத்தப்பட்டபின்னர் களவாடல் ஆரம்பமாகியது. இச் செயலில் எவ்வாறு சிங்கள பொது மக்களும் ராணுவத்தினருடன் சேர்ந்து கொண்டனர் என்பதை நேரிற்கண்டோர் விளக்கினர்.

"...சனி நண்பகல் பலியான இருவரில் ஒரு பெண்ணும் அவரது இளவயது மகளும் - மரணச் சடங்குகளில் கலந்து கொண்டேன். தரையில் இழுக்கப்பட்டதால் அவர்களின் முகங்கள் காயமடைந்திருந்தன இச் சடங்கில் கலந்து கொள்கையில் ஒரு லொறியில் இன்னுமிரு சடலங்களைக் கண்டோம். அவர்கள் இருவரும் அன்று காலை ஹெலிகொப்டரில் தரையிறங்கிய ராணுவத்தினரால் சுடப்பட்டிருந்தனர். வவனியா அரச அதிபர், ராணுவ வன்செயலினால் இறந்தோர் தொகை 200 க்குக் குறையாது எனக்கூறினர், ஏனைய தமிழர் வட்டாரங்களின் தகவல்படி இத் தொகை இன்னும் அதிகமாகவுள்ளது.."

## "ஆபரேசன் நிலாவெளி"

செப் 18ம் திகதியின் இலங்கை 'டெய்லி நியூஸ்' கூறியதாவது,'' அண்மைக் காலங்களில் இடம்பெற்ற மிகப் பெரிய நடவடிக்கை எனக் கூறப்பட்ட இந்த 'ஆபரேஷன் நிலாவெளியிலுள்ள முகாமை நோக்கி நடத்தப்பட்டது. 12 மணித்தியால சமரின் பின்னர் 45 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்; 84 பேர் சரணடைந்தனர்.''

நேரில் கண்டவர்களின் தகவல்கள்படிநிலாவெளியில், இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட சமயம் செப். 16-ம் திகதி, முல்லைத்தீவு, திருமலை பகுதிகளில் ஆயுதபாணிகளான சிங்கள குடியேற்றவாசிகளினதும், ஊர்காவலரினதும், பாதுகாப்புப் படையினரதும் வன் செயல்களையடுத்து இங்குஇடம் பெயர்ந்த மக்களால் நிரம்பி வழிந்தது. வெறுமையாகக் கிடந்த ஹோட்டல்களிலும் அந்தோனியார் ஆலயத்திலும் நூற்றுக்கணக்கணக்கான மக்கள் அடைக்கலம் புகுந்திருந்தனர். இங்கு சில தமிழ் கெரில்லாக்களும் இருந்திருக்கலாம் ஆயினும் 12 கவச வாகனங்கள் 6 டாங்கிகள், 2 ஹெலிகள், பலரோந்துப் படகுகள் ஆகியவற்றுடன் படையினர் மேற்கொண்ட இந்த நடவடிக்கைகளின் போது பெண்கள் குழந்தைகள் உட்பட பல சிவிலியன்கள் கொல்லப்பட்டனர். இறந்தோரில் அநேகர் ஏனைய பகுதிகளிலிருந்து நிலாவெளி வந்திருந்த அகதிகளாவர்.

இந்த 'ஆபரேஷன்' பற்றி நேரில் கண்ட ஒருவர் விளக்கமளிக்கின்றார்.

"... வீரநகரில் இடம் பெற்ற தாக்குதலையடுத்து நாங்கள் நிலாவெளிக்கு அகதிகளாக வந்திருந்தோம். நான் எனது கணவர் 3 பிள்ளைகளுடன் இன்னும் 10 குடும்பங்களும் அந்தோனியர் ஆலயத்தில்தற்காலிகமாக அடைக்கலமளிக்கப்பட்டோம். 16-ம் திகதி காலை 5 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களைக் கேட்டோம் இதனையடித்து பலசிப்பாய்கள் ஆலய வளவினுள் புகுந்தனர். அச் சத்தினால் ஓடிய நாங்கள் முழுப்பிரதேசமுமே சுற்றி வளைக்கப்பட்டுருப்பதை அறிந்தோம். பின்னர் நாங்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டு ஆலயத்தினுள் அழைத்து வரப்பட்டோம் எனது கணவரிடம், இளநீர் பிடுங்கித்தர முடியுமா) என படையினர் கேட்டபோது அவர் தனக்கு மரமேறத் தெரியாது எனக் கூறினர். அப்போது துரைநாயகம் (வயது 35) முன்வந்து அவ்வேலையைச் செய்து கொடுத்தார். மாலை 7–30 மணிவரை நாங்கள் அங்கேயே உணவின்றி வைத்திருக்கப்பட்டோம். இதனிடையே எம்மிடமிருந்த சில இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 7 மணியைப்போல் படையினர் எம்மை விட்டுச் சென்றனர். அதன் பின்னர் ஆலயத்தை விட்டகன்று அருகிலுள்ள கொச்சித் தோட்டம் செல்ல நினைத்தோம்.

"......போகும் வழியில் பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள் உடபட 40 பேரின் சடலங்களைக் கண்டோம். துரைநாயகத்தின் சடலமும் அங்கிருந்தது; கடற்கரையைக் கடந்தபோது அரைகுறையாக எரிந்த 3 சடலங்களுடன் பிளாஸ்ரிக் வள்ளமொன்றைக் கண்டேன்......''.

பைலட் ஹோட்டல் அகதி முகாமிலிருந்த இன்னொருவரின் வாக்கு மூலம்

"......16ம் திகதி காலை எமது ஹோட்டலுக்கு வந்த படையினர் எம்மை பெண்கள் இளைஞர், வயது வந்தோரெனத் தரம் பிரித்தனர்...... நடுத்தரவயதுடைய மூவர் உயிருடன் எரிக்கப்பட்டதைச் கண்டேன். 15-40 வயதுக்கு மிடைப்பட்ட சகல ஆண்களையும் படையினர் தம்முடன் கொண்டு சென்றனர்.

இந்த ஆபரேஷன் நிலாவெளியின்போது 150ற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக பிரயஜைகள் குழுக்கள் கணித்துள்ளன.

## செப் 20ம் திகதி

செப் 20ம் திகதி அம்பாறையிலுள்ள கல்வெட்டுக்கிராமத்தினர் வீடொன்றினுள் புகுந்த ஊர்காவற்படையினர், அங்கு வீடியோ படம் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் மேல் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 15 பேர்கொல்லப்பட்டனர்.

தொகுப்பு;- 'ஸேனு'

(தொடரும்)

## அரச அதிபர் பார்வையிட்டார்

பண்டத்தரிப்பு, புதன்

ஷெல் தாக்குதலினால் சேதமடைந்து இயங்க முடியாத நிலையில் இருக்கும் யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனைக் கட்டிடத்தை யாழ் அரச அதிபர் மு. பஞ்சலிங்கம் மற்றும் மாவட்ட இணைப்பு உத்தியோகத்தர் திரு. பாலசிங்கம் பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. குலசேகரம் ஆகியோர் நேரடியாக வந்து பார்வையிட்டனர்.

அலுவலக கட்டிடம் பாவனைக்கு உதவாத நிலையில் இருப்பதால் வேறு கட்டிடத்திற்கு அலுவலகம் இடமாற்றம் செய்யப்படவிருப்பதாகவும் யாழ் சுகாதார திணைக்கள பிரதம கணக்காளர் திரு. எக்ஸ். ஞானசேகரம் தெரிவித்தார்.

தற்போது அலுவலகம் செயற்பட முடியாத நிலையில் இருந்த போதிலும் 25ம் திகதி யாழ் சுகாதார திணைக்கள ஊழியர்களின் சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் யாழ் தாதிகள் பயிற்சி பாடசாலை கட்டிடத்தில் வைத்து சம்பளம் தயாரிக்கும் வேலைகள் நடைபெற்று வருவதாகவும் திரு. ஞானசேகரம் மேலும் தெரிவித்தார்.

## வருடாந்த திருவிழா

அராலி, புதன்

சங்கானை மாவடி வைரவ ஆலய வருடாந்த அலங்கார திருவிழா சென்ற 22ந் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

## திருவாசகக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் வியா

திருவாசகக் கருத்தரங்கு எதிர்வரும் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரை யாழ். திவ்யஜீவன சங்கமண்டபத்தில் சபாரத்தினம் சுவாமிகள் (திருக்கேதீஸ்வரம் திருவாசகசுவாமிகள்) முன்னிலையில் நடைபெறும்.

அன்றைய சிறப்பு நிகழ்ச்சிகளாக பஜனை, திருவாசக விளக்கம் என்பவற்றுடன் சபாரத்தினம் சுவாமிகளின் வரலாறு அடங்கிய மலரும் அடியவர்களால் வெளியிடப்படவுள்ளது.

## சித்தியடைந்தோர் விபரம்

வல்வைட்டித்துறை, புதன்

யாழ்.கல்வித்திணைக்கள முறைசாரப் பிரிவினால் கடந்த வருடம் நடாத்தப்பட்ட ஆங்கில சுருக்கெழுத்து, தட்டச்சு பரீட்சையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து சித்திமெற்றோர் விபரம் வருமாறு:

செல்விகள் வசந்தி சுந்திரலிங்கம். சசிகலாதேவி ஆனந்த வடிவேல், கலாவதி நடராசா, பாலநந்தினி பரஞ்சோதி, வளர்மதி சுந்தரலிங்கம்.

## பாகிஸ்தான் மீண்டும் வெற்றி

புதுடில்லி,மார்ச் 25

இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கிடையே நாக்பூரில் இன்றுநடைபெற்ற 5வது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் பாகிஸ்தான் அணி 41ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 44 ஓவர்களில் 6விக்கெட் இழப்புக்கு 286 ஓட்டங்களைப் பெற்றது இதனைத் தொடர்ந்து ஆடிய இந்திய அணி 9 விக்கெட் இழப்புக்கு 245 ஓட்டங்களையே பெற்றது. கவாஸ்கர் 70 ஓட்டங்களைப் பெற்றார்.

இவ்வெற்றி மூலம் 6போட்டிகள் கொண்ட இத்தொடரை 4-1 என்றரீ யில் பாகிஸ்தான் வெற்றி கண்டுள்ளது.

(ஊ)

பிரயாண ஒழுங்கு

★ Canada

★ Australia ★ Germany

★ France ★ Italy

★ குறிப்பாக France, Germany, Italy ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் வெகுசீக்கிரத்தில் அழைத்துச் செல்ல உள்ளார்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் [BOND], விசா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ,

மானிப்பாய்.

எமக்கு வேறுகிளைகள் கிடையாது. எ-3588

KEEN CENTRE

88, பலாலி றோட், திருநெல்வேலி.

89 A/L

பொருளியல் — திரு. வரதராஜன்
கணக்கியல் — திரு. வன்னியசிங்கம்
வர்த்தகம் — திரு. ரட்ணம்
அளவையியல் — திரு. S. S. மனோகரன்
இந்து நாகரீகம் — திரு. பாலா
தமிழ், அரசியல், புவியியல்

ஆரம்பம் 28-3-87 (சனி 3-00)

89 A/L

விஞ்ஞானம்

MATHS — திரு. நல்லையா
PHY — திரு. மணியம்
— திரு. சத்தியசீலன்
CHE — யாழ். பிரபல ஆசிரியர்
BOT — திரு. சர்வானந்தா
ZOO — திரு. நாகநாதன்

ஆரம்பம் 28-3-87 (சனி 4-00)

87 A/L 88 MATHS — திரு. ஈசன்
87 A/L வினாவிடை — SAT SUN 3-00
88 A/L — SAT SUN 1–00

ஆரம்பம் 28–3–87 சனி [ஏ 3806]

# BECON
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

யாழ்.

## 89 A/L

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. வரதராஜன் |
| கணக்கியல் | — | திரு. மரியதாஸ் |
| வர்த்தகம் | — | திரு. ரட்ணம் |
| அளவையியல் | — | திரு. S. S. மகேசுரன் |
| இந்து நாகரீகம் | — | திருமதி இ.அருள்நங்கை |
| தமிழ் | — | திரு. நாகேஸ்வரன் |
| புவியியல் | — | திரு. பாலா, சன் |
| அரசியல் | — | திரு. மகதைல்ட் |

ஆரம்பம்: 28-3-87 (சனி 8 மணி)

## விஞ்ஞானம் 89 A/L

| | | |
|---|---|---|
| MATHS | — | திரு. நல்லையா |
| PHY | — | திரு. யோகானந்தா |
| CHE | — | திரு. பாபு |
| BOT | — | திரு. சர்வானந்தா |
| ZOO | — | திரு. தம்பிராஜா |

ஆரம்பம்: 28-3-87 (சனி 9-30)

87 A/L பௌதிகம் — திரு. யோகானந்தா

அலையியல் (ஒலியியல்) சனி, ஞாயிறு 7-15 (28-3-87

எ-3805


# இந்து இளைஞர் மன்றஆண்டு விழா

மண்டைதீவு, புதன்

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் 46 வது ஆண்டு விழாவும், இம் மன்றத்தின் மூன்றாவது ஆண்டு நூலக விழாவும் அண்மையில் நடைபெற்றது.

யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. இராமநாதர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான பரிபாலன சபையின் சார்பிலும் இவ்வாலயத் தொண்டர் சபையின் சார்பிலும் திரு. எம். எஸ். சிவப்பிரகாசம் சமய சொற்பொழிவாற்றினர்.


# A/L 89 பிரிவு – II
(விஞ்ஞான பாடங்கள்)

ஆரம்பம்: 28–03–87

(சனிக்கிழமை காலை 7-30 மணி)

(எமது வழமையான ஆசிரியர் குழுவினுல்)

| | | |
|---|---|---|
| 7-30 — 8-30 | — | விலங்கியல் |
| 8-30 — 9-30 | — | தாவரவியல் |
| 9-30 — 10-30 | — | பௌதிகவியல் |
| 10-30 — 11-30 | — | இரசாயனவியல் |
| 11-30 — 1-30 | — | தூயபிரயோககணிதம் |

குறிப்பு: பிரிவு I க்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

விபரங்கட்கு:

New Master Institute

B. M. C Lane, Jaffna.

(எ-3600)


# கல்விப் பணிப்பாளர் அறிவித்தல்

உடுவில், புதன்

தற்போதுள்ள சூழ்நிலை காரணமாக நடமாடும் பற்சிகிச்சை நிலையங்களை நடாத்துவதில் பலசிக்கல்கள் இருப்பதனுல் நிரந்தரமாக உள்ள பின்வரும் பாடசாலைப் பற்சிகிச்சை நிலையங்களில் ஏனைய பாடசாலை மாணவர்களை கூட்டிச்சென்று சிகிச்சை அளிக்கும்படி யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச் சரி, மானிப்பாய், வேலணை, புங்குடுதீவு வட்டாரப்பாடசாலை அதிபர்களுக்கு யாழ்ப்பாணம் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

வேம்படி மகளிர் கல்லூரி, டிறிபேக்கல்லூரி, இராமநாதன் கல்லூரி, வேலணை சேர் வைத்திலிங்கம் குமாரசாமி மத்திய மகாவித்தியாலயம்' யாழ். பரியோவான் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நிரந்தர பற்சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

# இன்றைய பலன்

மாதம்: பங்குனி.
திகதி: 12 [1987-3-26]
கிழமை: வியாழன்.
திதி: துவாதசி மு.இ. வரை.
நக்ஷத்திரம்: அவிட்டம் பி. இ. வரை.

மேடம்: அறிஞர்களின் தொடர்புகளுக்கும் இடமுண்டு. முதியோர்களின் ஆசியும் கிடைக்கும். பொருள் வரவுக்கும் இடமுண்டு.

இடபம்: அறவழியில் மனம் செல்லும். தாராள மனப்பான்மையின் மூலம் பணம் செலவாகும். இளைய பிள்ளையால் மகிழ்ச்சியுமுண்டு.

மிதுனம்: மனம் புண்படும் சம்பவங்களும் இடம்பெறும். தொழிற்துறையிலும் முட்டுக்கட்டை தோன்றும். இன்று கைசமூட்டங்களும் வட்டமிடும்.

கடகம்: உறவு முறைகள் கள் பலப்படும். மனதில் உற்சாகம் பிறக்கும். இன்று இனத்தவர்களுடன் பகைத்துக்கொள்ள நேரிடும்.

சிங்கம்: சிறிய விடயம்கூட இன்று சிரமமாகத்தோன்றும். உள் வீட்டிலேயே பூசல் தலைதூக்கும். வாய்வுப்பதார்த்தங்களைத் தவிர்க்கவும்.

கன்னி: கைகொடுத்துதவுவதற்குத் தந்தை முன்வருவார். காரிய சித்தியும் கிடைக்கும். நீண்ட நாள் எதிரிகள் இன்று மீண்டும் நண்பர்களாவார்கள்.

துலாம்: தொழிற்றுறையில் நல்ல மாற்றங்கள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நண்பர்கள் மூலம் புதிய தொடர்புகள் கிடைக்கும்.

விருச்சிகம்: மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். உள்ளத்திலும் உவகை துள்ளும்.

தனுசு: தனிய நஷ்டத்திற்கு இடமுண்டு. வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக்கொள்ளவும் இன்று அவதானம் நன்று.

மகரம்: வெளியிடத்துத் தொடர்புகளில் மந்தநிலை காணப்படும். தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கும். திடீர் பயணத்திற்கு இடமுண்டு.

கும்பம்: நெருங்கிய நண்பர் ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடும். அற்ப விடயத்திற்குக்கூட ஆத்திரப்படுவீர்கள். அடக்கம்வேண்டும்.

மீனம்: எதிர்பார்த்தவேதனம் இடையில் தடைப்படலாம். சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லையும் அதிகரிக்கலாம். சகோதர வழி சஞ்சலமும் உண்டு. தெய்வ நம்பிக்கை வேண்டும்.

திருமலை ரவீந்திரன்


# Lipton

# லிப்டன் லாவோஜி பிரியர்களுக்கோர் நற்செய்தி

புதிய குறைந்த விலையில், அதி நிறைந்த சுவையுடன் "லிப்டன்" வாசகம் பொறிக்கப்பட்ட அலுமினியம் சுற்றுத்தாளில் அடைக்கப்பட்டு புதிய பொலிவுடன் "லாவோஜி" தேயிலைப் பக்கட்கள் இப்பொழுது எங்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

போலி லிப்டன் லாவோஜி பக்கெட்டுகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதனுல் லாவோஜி தேயிலை வாங்கும்போது, மேற்கூறப்பட்ட முக்கிய அம்சங்களை அவதானித்து அசல் லாவோஜியை உங்கள் மொத்த, சில்லறை, வியாபாரிகளிடம் பெற்றுக் கொள்ளுங்கள்.




புதிய விலை: ரூபா 3/60 (50 கிறும்)

லிப்டன் சிலோன் லிமிட்டெட்,

த. பெ. எண் 86,

கொழும்பு.

லிப்டன் லவோஜி

அதி சிறந்த தேயிலைத் தூள்

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
வியாழக்கிழமை 26-3-87

நாவற்குழி

# இராணுவ முகாம், ஹெலிகளிலிருந்து ஷெல் தாக்குதல்; ஒருவர் பலி

யாழ்ப்பாணம்,வியா.

நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினாலும் கோப்பாய், இருபாலை, அரியாலைப் பகுதிகளைச் சுற்றி வட்டமிட்ட மூன்று ஹெலிகொப்டர்களிலிருந்து பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கியும் இருபாலை – கோப்பாய் வயல் வெளியில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயிகளை நோக்கியும் ஷெல் தாக்குதலும், ஹெலி 30 தாக்குதலும் மேற்கொள்ளப் பட்டதினாலும் ஒருவர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்துள்ளனர். வீடுகள் பல சேதமடைந்துள்ளன.

நேற்று நண்பகல் பதினொரு மணியளவில் இப்பகுதிகளைச் சுற்றி தாழப்பறந்து வட்டமிட்ட மூன்று ஹெலிகளும் ஒரு மணித்தியாலம்வரை தாக்குதல் நடத்தியது.

இத்தாக்குதலினால் அச்சமடைந்த மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடி தஞ்சமடைந்தவண்ணமிருந்தனர்.

இருபாலைப்பகுதியில் ஹெலிகொப்டரிலிருந்து நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் இளம்பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

செரீன் சுகந்தினி நைட் (17 வயது, அச்செழு) என்பவரே இங்கு நடந்த தாக்குதலில் காயமடைந்தவராவர்.

வீதியால் சைக்கிளில்சென்று கொண்டிருந்தபோது ஹெலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் காயமடைந்த இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் இப்பகுதிகளில் நடந்த தாக்குதலினால் காயமடைந்த பலர் தனியார்வைத்தியசாலைகளிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க நாவற்குழி இராணுவமுகாமிலிருந்து நேற்றுக்காலை அரியாலையை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினால் மணியம் தோட்டத்தைச் சேர்ந்த பாபு (27 வயது) என்பவர் பலியானார். யாழ். முஸ்லிம் தெருவைச் சேர்ந்த செயுனுல் ஆப்தீன் ருபீக் (24 வயது) காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ–கு)

## 'சீ'பிளேன் நோட்டம்

யாழ்ப்பாணம், வியா

தமிழீழ விடுதலைப்புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்ட இராணுவத்தினர், பொதுமக்கள் பார்வைக்காக இருத்தப்பட்ட இடத்திற்கு, புலிகளின் குடாநாட்டுத்தளபதி, திரு. கிட்டு பிற்பகல் சுமார் 4-30 மணியளவில், கைதிகளின் நிலைமைகளைக் கண்காணிக்க வந்தபோது, 'சீ'பிளேன் ஒன்று அவ்விடத்தைச்சுற்றி வட்டமிட்டு நோட்டமிட்டது.

திரு. கிட்டு அடிக்கடி அவ்விடத்திற்குச்சென்று நிலைமைகளை அவதானித்தார். (வா)

## இந்திய மத்திய மாநில அமைச்சர்களை ஈரோஸ் பாலகுமார் விரைவில் சந்திப்பார்

சென்னை, மார்ச் 25

ஈரோஸ் இயக்கப் பிரமுகர் திரு.வி.பாலகுமார் விரைவில் இந்திய மத்திய மாநில அமைச்சரவைத் தலைவர்களை சந்திக்கவுள்ளதாக சென்னையிலிருந்து வரும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

திரு. பாலகுமார் இச்சந்திப்பின்போது யாழ். குடாநாட்டுப்பகுதியில்விதிக்கப்பட்டுள்ள எரிபொருள், பொருளாதார தடையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பிரச்னை பற்றி எடுத்துக் கூறுவதுடன் அவர்களுக்குத் தேவையான உணவு, எரிபொருள் மற்றும் மருந்து வகைகளைத் தந்துதவுமாறும் கோருவாரென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று மாதங்களாக வடக்கு,கிழக்கு, பகுதியில் பல இடங்களிலும் திரு.பாலகுமார் தங்கியிருந்து அண்மையில் சென்னை வந்தாரென்றும் அச்செய்தி குறிப்பிட்டுள்ளது.

## யுத்தகைதிகள் பற்றி அமைச்சரவை ஆராய்வு

(கொழும்பு)

யாழ்ப்பணத்தில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை பொலிஸ் விடுதிமீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தி சிறைப்பிடித்த இராணுவத்தினர் தொடர்பாக நேற்று நடைபெற்றஅமைச்சரவைச்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் சேருநுவரவில் இனந்தெரியாத, ஆயுத கோஷ்டிமேற் கொண்ட தாக்குதலில் 25 பேர் கொலைசெய்யப்பட்டது தொடர்பாகவும் ஆராயப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது. [சி]



யுத்தக்கைதிகள் மக்கள் பார்வைக்காக ஜீப்பில் கொண்டுவரப்படுவதையும் இறக்கப்படுவதையும் படத்தில் காண்க.



யுத்தக்கைதிகளை பார்வையிடுவதற்கு திரண்டிருந்த மக்களின் ஒருபகுதி. படங்கள்: தேவா.

இலங்கையின் ஒருமைப்பாட்டை குலைக்கும்

## எவ்வித சமாதான திட்டத்தையும் இலங்கை மீது திணிக்கவேண்டாம்

### ராஜீவிடம் இலங்கை புத்த பிக்குகள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் ஒருமைப்பாட்டையும், அரசாட்சியையும் பிளவு படுத்தும் எவ்வித சமாதானத் திட்டத்தையும் இலங்கை அரசின் மீது திணிக்க வேண்டாமென்று இலங்கை புத்த பிக்குகள் சங்கமொன்று இந்தியப் பிரதமர் திரு, ராஜீவ் காந்தியை கேட்டுள்ளனர்.

இலங்கை இனப்பிரச்னை தீர்வு பற்றி இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட இச்சங்கம் மேற்படி வேண்டுகோளை விடுத்ததுடன் மேலும் கேட்டுக்கொண்டுள்ளதாவது:

இனப்பிரச்னைக்கான தீர்வில் இந்திய அரசு பாரபட்சமாக நடந்துகொள்ளாது பெரும்பான்மையின மக்களின் நலனையும் கருத்தில் கொண்டு இலங்கையின் ஒருமைப்பாட்டை பேணும் விதத்தில் தீர்வை ஏற்படுத்தவேண்டும். (சி)

## நாளைமுதல் ஏப்ரல் 3 வரை பிரார்த்தனை வாரம்

யாழ்ப்பாணம், வியா

மனித உரிமைகளை இந்நாட்டில் நிலைநிறுத்தவும் நிரந்தரமான நீதியான சமாதானம் உண்டாகவும் விரைவில் சுமுகமான தீர்வு கிடைக்கவும் வேண்டி நாளை 27ந் திகதி வெள்ளி தொடக்கம் ஏப்ரல் 3ம் திகதி வரை பிரார்த்தனை வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் அறிவித்துள்ளது.

அன்னையர் முன்னணி, சனசமூகநிலையங்களின் சமாஜம், தேசிய கலைஇலக்கியப்பேரவை, குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச்சங்கம், மதநிறுவனங்கள் மற்றும் வெகுஜன ஸ்தாபனங்கள், தொழிற் சங்கங்கள் ஆகியன மனிதஉரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்துடன் இணைந்து இப்பிரார்த்தனை வாரத்தை பிரகடனப் படுத்தியுள்ளன.

மேலும் இப் பிரார்த்தனை வாரத்தில் சகல இடங்களிலுமுள்ள பாடசாலைகள், வழிபாட்டுத்தலங்கள், தொழில் நிலையங்கள் ஆகியனவும் இவ் பிரார்த்தனை வாரத்தை அனுஷ்டிக்குமாறு மேற்படிஅமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

பிரார்த்தனைவார இறுதி நாளான ஏப்ரல் 3ம் திகதி வெள்ளிக்கிழமை காலை யாழ். செயலக முன்றலில் நடைபெறும் சகலமத ஸ்தாபனங்களும்கலந்துகொள்ளும் பிரார்தனை வைபவம் ஒன்று நடைபெறும் என்றும் இவ்வமைப்புகள் தெரிவித்துள்ளன. [ஓ]

## ஈழவர் முன்னணி பேரணி இன்று

யாழ்ப்பாணம்,வியா

ஈழப் போராட்டத்தை இந்திய அரசு அங்கீகரிக்கக் கோரி இன்று யாழ். நகரில் ஈழவர் முன்னணியினரால் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

யாழ். நாச்சிமார் கோவிலடியில் இருந்து ஆரம்பமாகும். இந்த ஊர்வலம் யாழ் பிரதான வீதிகளூடாக செயலகத்தை சென்றடையும். (வா)

## நேரம் தவறாத உபசரிப்பு

யாழ்ப்பாணம்,வியா.

பொதுமக்கள் பார்வைக்கு இருத்தப்பட்டிருந்த யுத்தக் கைதிகளுக்கு நேரம் தவறாது உணவு வகைகளும், நீராகாரமும், புகைப்பதற்கு சிகரட்டும் வழங்கப்பட்டது. [வா]

## அரச அதிபர் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், வியா.

யாழ். கோட்டை இராணுவ முகாம் இராணுவத்தினரின் 'ஷெல்' தாக்குதலில் சேதமடைந்த அரசாங்கக் கட்டிடங்களை யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் நேரில் சென்று பார்வையிட்டார்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். ஆஸ்பத்திரி கட்டிடம், சேதமடைந்த வார்ட்டுகள், நோயாளர்களையும் அரச அதிபர் சந்தித்து சம்பவம் பற்றி நேரில் அறிந்துகொண்டார்.

## மரண அறிவித்தல்

### திருமதி பராசக்தி யோகரத்தினம்

திருமதி பராசக்தி யோகரத்தினம் 25-3-87ல் காலமானார். இவர் உரும்பராய் வடக்கு காலஞ்சென்ற புகையிரதநிலைய அதிபர் செல்லையா யோகரத்தினத்தின் அன்பு மனைவியும், சசிலேகா (லண்டன்), சாந்தினி (லண்டன்), சிவகுமார் (லண்டன்), சிவயோகன் (யாழ். தொழில்நுட்பக்கல்லூரி மாணவன்), சுமதி ஆகியோரின் அன்புத்தாயாரும், அசோகன் (லண்டன்), சந்திரதாஸ் (லண்டன்), அனுசுயா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தேனுசியா, பிரதீசியா, கவிதா ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (26-3-87) பிற்பகல் 3 மணிக்கு உரும்பராய் வடக்கு 'திருவீதி'யில உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.
(சி 8218) தகவல்: பிள்ளைகள்.

### திரு. நல்லதம்பி யேசுரத்தினம்

நல்லதம்பி யேசுரத்தினம் காலமானார். அன்னார் புஷ்பராணியின் அன்புக்கணவரும், தயாபரன் தயாளன், தயாளினி, நேசன், தாசன், மோகன் ஆகியோரின் அன்புத்தந்தையும், திருமதிகள் இரத்தினமலர், இரத்தினராசா, ஜெயமணி துரைரத்தினம், கமலாதேவி ஏர்ணெஸ்ற், திரு. அரசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை [இன்று] வியாழக்கிழமை 26-03-87 மாலை 4-00 மணிக்கு அன்னரது இல்லம் 'நிம்மதி' ஏழாலை தெற்கில் நடைபெறும்.
தகவல்:
சி-8216 திருமதி யேசுரத்தினம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389 — 24126.